09.11.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொட்டி தீர்க்கிறது கனமழை: பள்ளி,கல்லூரிகளுக்கு விடுமுறை



சென்னை : வங்கக்கடலில் உருவாகி இருக்கும் காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பல மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று (நவ.,9) நடைபெறுவதாக இருந்த செமஸ்டர் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

### விடுமுறை அறிவிப்பு :

தொடர் கனமழை காரணமாக சென்னை, திருவாரூர், அரியலூர், திருவண்ணாமலை, வேலூர், புதுச்சேரி, காரைக்கால், தஞ்சாவூர், நாமக்கல், நாகப்பட்டினம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது. சென்னை

பல்கலை.,யில் இன்று நடைபெறுவதாக இருந்த செமஸ்டர் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தேர்வு நடைபெறும் நாள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக புதுச்சேரி மத்திய பல்கலை.,க்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## மழை தொடரும் :

வங்ககடலில் சென்னைக்கு அருகே நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாற வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயலாக மாறினால் அதற்கு ரோனு என பெயரிடப்படும் புதுச்சேரிக்கு கிழக்கு தென்கிழக்கே 300 கி.மீ., தொலைவில் புயல் நிலைக் கொண்டுள்ளது. இந்த புயல் சின்னம் மேற்கு வடமேற்காக நகர்ந்து புதுச்சேரி அருகே இன்று (நவ.,9) இரவு கரையை கடக்கும். இதனால் தமிழகத்தின் வடகடலோர பகுதிகளில் மணிக்கு 60 முதல் 70 கி.மீ., வேகத்தில் காற்று வீசக் கூடும். கடல் சீற்றம் அதிகமாக இருக்கும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் விட்டு விட்டு மழை பெய்யவும் வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சூறாவளி காற்று :

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக சென்னை, புதுச்சேரி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் பலத்த புயல் காற்று வீசி வருகிறது. இதனால் பல இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. புயல் இன்று இரவு கரையை கடக்கும் என்பதால் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்யும் எனவும் வானிலை மையம் எச்சரித்துள்ளது. புயல் கரையை கடக்கும் போது தமிழகத்தில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கடலுக்குள் செல்ல வேண்டாம் : மீனவர்களுக்கு எச்சரிக்கை

சென்னை: வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதை முன்னிட்டு கடல் சீற்றமாக காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது வஙகக்கடலில்உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாற வாய்ப்பு உள்ளது புதுச்சேரி அருகே கிழக்கு தென் கிழக்கில் 300 கிமீ தொலைவில் உள்ள புயல் மேற்கு வடமேற்கே நகர்ந்து நாளை கரையை கடக்கும் என எதிர்பார்க்கபடுவதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சென்னையில் புயல் கூண்டு எச்சரிக்கை

சென்னை: வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாற வாய்ப்பு உள்ளதால் சென்னை மற்றும் நாகையில் மூன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றபட்டுள்ளது .

## மாடியில் மூலிகை தோட்டம்: 13ல் பயிற்சி வகுப்பு

சென்னை:மாடியில் மூலிகை தோட்டம் அமைப்பது குறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலை மூலம், சென்னையில் வரும், 13ம் தேதி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலையின் தகவல் மற்றும் பயிற்சி மையம் வெளியிட்டுள்ள அறிக்கை:வீட்டின், பின் பகுதிகளில் உள்ள காலி இடங்கள், குறைவாக அல்லது இடப்பற்றாக்குறை இருந்தால், வீட்டு மாடி பகுதிகளில் காய்கறி மற்றும் மூலிகை பயிர்களை வளர்க்கலாம்.

ஆண்டு முழுவதும், வீட்டின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தேவையான பழம், காய்கறி கிடைப்பதுடன், சிறுசிறு உடல் உபாதைகளை தவிர்த்து, வீட்டு வைத்தியம் செய்யும், மூலிகைகளும் கிடைக்கும். நகராட்சி மற்றும் கிராம பகுதிகளுக்கு மட்டுமல்லாது,

அனைத்து குடும்பத்தினர்களும், எளிய முறையில் மாடி தோட்டம் அமைத்து பராமரிக்க இப்பயிற்சி அவசியம். இதுகுறித்த ஒருநாள் பயிற்சி, வரும் 13ம் தேதி, சென்னை அண்ணா நகரில் உள்ள, வேளாண்

பல்கலைக் கழக தகவல் மற்றும் பயிற்சி மையத்தில் நடக்க உள்ளது.

பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள், 044 -- 2626 3484 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சி நேரம், காலை 9:30 மணி முதல், மாலை 4:30 மணி வரை. பயிற்சி பற்றிய குறிப்பேடு, கையேடு, மதிய உணவு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**சென்னையில் நள்ளிரவில் கனமழை: மரங்கள் சாய்ந்தன**

சென்னை: சென்னையில் நள்ளிரவில் பல இடங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் மரங்கள் சாய்ந்தன.

**புயல்: பாம்பனில் ஒன்றாம் எண் கூண்டு ஏற்றம்**

ராமேஸ்வரம்:வங்க கடலில் புயல் சின்னம் உருவாகி உள்ளதால், பாம்பன் துறைமுகத்தில் நேற்று ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்பட்டது.

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயல் சின்னமாக மாறியது. இது சென்னையில் இருந்து தென்கிழக்கு திசையில் 450 கி.மீ., துாரத்தில் மையம் கொண்டு மெல்ல நகர்ந்து வருகிறது. அடுத்த 24 மணி நேரத்தில் காரைக்கால், புதுச்சேரி இடையே புயல் கரையை கடக்கலாம் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.புயல் உருவாகியுள்ளதால் ராமேஸ்வரம் பாம்பன் துறைமுக அலுவலகத்தில் நேற்று மாலை ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்பட்டது.

## வெண்டைக்காய் கிலோ 30 ரூபாய் மகிழ்ச்சியில் தேனி விவசாயிகள்



தேனி:வெண்டைக்காய் கிலோ 30 ரூபாய்க்கு விற்பனையாவதாலும், தேவை அதிகரித்துள்ளதாலும் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் வெண்டைக்காய் சாகுபடி பரவலாக செய்துள்ளனர். இரு மாதங்களுக்கு முன் ஒரு கிலோ வெண்டைக்காய் கிலோ ரூ.7 முதல் ரூ.10க்கு விற்பனையானது. இதனால் சாகுபடி செய்த விவசாயிகள் போதிய விலை கிடைக்க வில்லை என வருந்தினர். இந்நிலையில் தேனி ஏல கமிஷன் கடைகளில் தற்போது வெண்டைக்காய் விலை உயர்ந்து வருகிறது. 75 கிலோ எடையுள்ள மூடை ஒன்று ரூ.1,900ம் வரை விலை போகிறது.

இதனால் மார்கெட்டில் சில்லரை விலையில் ரூ.30 வரை விற்பனையாகிறது. விலை அதிகரித்தாலும் தேவை உள்ளதால் விற்பனை நல்ல முறையில் உள்ளது.

வெங்கடாசலபுரம் விவசாயி செல்வராஜ்,' ஒரு ஏக்கரில் வெண்டைக்காய் சாகுபடி செய்துள்ளேன். இதில் பத்து நாட்களுக்கு ஒருமுறை காய் எடுக்கிறோம். ஒரு எடுப்பிற்கு 350 முதல்

400 கிலோ மகசூல் கிடைக்கிறது. மொத்தம் 20 முதல் 23 முறை காய் பறித்து கொண்டு செல்வோம். ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் செலவு செய்துள்ளேன். இப்போது விற்கும் நல்ல விலை நீடித்தால் செலவு போக ஏக்கருக்கு ரூ.50ஆயிரம் லாபம் கிடைக்கும்' என்றார்.

**ஒகேனக்கல் அருவியில் 4வது நாளாக குளிக்க தடை**

ஒகேனக்கல்:ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 11 ஆயிரம் கன அடியாக தண்ணீர் வரத்து குறைந்த போதும், நேற்று நான்காவது நாளாக, அருவியில் குளிக்க, சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

தமிழக, கர்நாடக மாநிலங்களின், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில், சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்தது. இதனால், காவிரியில் தமிழகத்திற்கு வரும் தண்ணீர் அளவு அதிகரித்தது. 3ம் தேதி முதல், ஒகேனக்கல்லில் பரிசல் இயக்கவும், 5ம் தேதி முதல், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குளிக்கவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது.

இந்நிலையில், காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில், பருவ மழையின் தீவிரம் குறைய துவங்கியதால், காவிரியில் தண்ணீர் வரத்து படிப்படியாக குறைய துவங்கியது. நேற்று தண்ணீர் வரத்து மேலும் சரிந்து, காலை, 10:00 மணிக்கு வினாடிக்கு, 11 ஆயிரம் கன அடியாக இருந்தது.இதனால், அருவியில் குளிக்கவும், பரிசல் பயணத்திற்கும், மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்கும் என, சுற்றுலா பயணிகள், பரிசல்ஓட்டிகள் எதிர்பார்த்தனர். ஆனால், குளிக்கும் அருவி பகுதியில் இருந்த மரக்கட்டைகளை அகற்றுதல் உள்ளிட்ட பணிக்காகவும், தண்ணீர் வரத்து மீண்டும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், மாவட்ட நிர்வாகம் நேற்று,

நான்காவது நாளாக குளிக்கவும்; 6வது நாளாக பரிசல் இயக்கவும் தடை விதித்து உத்தரவிட்டது.

இதனால், விடுமுறை தினமான நேற்று ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா வந்த பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

**மழையால் பசுந்தீவனம் அதிகரிப்பு மவுசு இழந்தது நெல் வைக்கோல்**

தேனி:இரண்டு மாதங்களாக தொடர்ச்சியாக மழை பெய்வதால் தமிழகத்தில் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தீவனம் விளைச்சல் அதிகரித்துள்ளது. நெல் வைக்கோல் வாங்க ஆளில்லை. எனவே விவசாயிகள் வயலில் தீ வைத்து அழித்து வருகின்றனர்.

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் சாகுபடி அறுவடையாகி வருகிறது.

அறுவடைக்கு பின் கிடைக்கும் வைக்கோலுக்கு வறட்சி காலத்தில் நல்ல விலை கிடைக்கும். ஒரு ஏக்கர் வைக்கோல் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.3 ஆயிரம் வரை விலை போகும். வெளி மாவட்டங்களில் இருந்து அதிகளவில் கால்நடை வளர்ப்போர், வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்வர். ஆனால் இந்த ஆண்டு வைக்கோல் வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.

ஏனென்றால், இரு மாதங்களாக தென் மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை பெய்தது. தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. மழை தொடர்ச்சியாக பெய்ததால் கால்நடைகளின் தீவனத்திற்கு தேவையான பசும்புல்லும், மானாவாரியில் சாகுபடியான தீவன சோளமும் நன்கு விளைந்துள்ளது.

தற்போதும் பரவலாக மழை பெய்து வருவதால், எங்கு பார்த்தாலும் பச்சை பசேல் என பசும்புல் கால்நடை தீவனம் தாராளமாக கிடைக்கிறது. இதனால் கால்நடை வளர்ப்போர் கூடுதலாக தீவனம் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் அறுவடையாகும் வைக்கோல் வாங்க கால்நடை வளர்ப்போர் வரவில்லை. உத்தமபாளையம் முதல் சின்னமனுார் வரை ரோட்டோரங்களில் 'வைக்கோல் போர்' குவியல் குவியலாக விற்பனைக்கு அடைந்து வைக்கப் பட்டுள்ளன.

விவசாயி ஒருவர் கூறுகையில், இந்த ஆண்டு அதிக மழையால் பசுந்தீவனம் விளைச்சல் அதிகம் உள்ளது. இதனால் வைக்கோல் வாங்க ஆட்கள் வரவில்லை. கேரள வியாபாரிகளும் வைக்கோல் கொள்முதல் செய்ய வரவில்லை. வயலில் இருந்து ரோட்டுக்கு வைக்கோலை சுமந்து வர ஆட்கள் இல்லாததால் வயல்களிலேயே சிலர் தீ வைத்து விடுகின்றனர். வைக்கோலுக்கு கிராக்கி இருந்தால் ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் வீதம் கூடுதலாக விவசாயிகளுக்கு கிடைத்து இருக்கும் என்றார்.

## நெல்லையில் தொடர் மழை அருவிகளில் வெள்ளப்பெருக்கு

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் விடிய விடிய பலத்த மழை பெய்தது. அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துவருகிறது.

மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் கனமழை பெய்தது.

குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

அதிகபட்சமாக மணிமுத்தாறு மலைக்கு மேல் உள்ள மாஞ்சோலை பகுதியில் 240 மி.மீ,மழை பதிவாகியது. இதனால் நேற்றுமுன்தினம் 66.10 அடியாக இருந்த மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில்

இரண்டு அடி உயர்ந்து 68 அடியானது.பாபநாசம் அணைப்பகுதியில் 100 மி.மீ.,மழை பதிவானது. பாபநாசம் அணை நேற்றுமுன்தினம் 87.45 அடியில்இருந்து 90 அடியாக உயர்ந்தது. சேர்வலாறு அணை 100.43 அடியில் இருந்து ஒரே நாளில் 6 அடி உயர்ந்து 106.46 அடியாக உயர்ந்தது.

சிறிய அணைகளில் ஏற்கனவே கருப்பாநதி அணை நிரம்பிவிட்டது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 74.80 அடியில் இருந்து 83 அடியாக உயர்ந்தது. ராமநதி அணையும் 73 அடியில் இருந்து 79 அடியாக உயர்ந்தது.

**வரத்து குறைவு: தக்காளி கிலோ ரூ. 60**

பழநி:பழநி பகுதியில் மழையால் தக்காளி வரத்து குறைந்து, ஒரு வாரத்தில் இருமடங்காக விலை உயர்ந்துள்ளது.

தக்காளி அழுகி தரமில்லாமல் உள்ள காரணத்தால், உழவர்சந்தையில் தற்போது 1300 முதல் 1500 கிலோ வருகிறது. மார்க்கெட்டில் ஒருபெட்டி ரூ.650 (15கிலோ) வரை விலைபோகிறது. உழவர் சந்தையில் கிலோ ரூ.50-55, கடைகளில் சில்லரை விலைக்கு கிலோ ரூ.60 வரை விற்கப் படுகிறது.

**தீவுகள் மூழ்குவதை தடுக்க புது திட்டம்**



ராமநாதபுரம்:மன்னார் வளைகுடா தீவுகள் கடலில் மூழ்குவதை தடுக்கும் வகையில், கரைகளில் பனைமரங்கள் வளர்க்க வனத்துறை முடிவு செய்துள்ளது.

மன்னார் வளைகுடாவில் மண்டபத்தில் இருந்து துாத்துக்குடி வரை வான், காசுவார், மனோலி, மனோலிபுட்டி, பூமரிச்சான், புள்ளிவாசல், சிங்கில் என்ற பெயர்களில் 21 தீவுகள் உள்ளன. இவற்றை சுற்றிலும் அதிகளவில் பவள உயிரிகள் வாழ்கின்றன.

பருவகால மாற்றத்தால் 2011ல் துாத்துக்குடியில் விலங்குசல்லி தீவு, கீழக்கரையில்

பூவரசன்பட்டி தீவு கடலுக்குள் மூழ்கின. அதேபோல் ஆண்டுதோறும் மற்ற தீவுகளிலும் 2 அங்குலம் முதல் அரை அடி பரப்பு வரை மூழ்கி வருகின்றன. இதை தடுக்க தீவு கரை ஓரங்களில், பனை மரங்களை வளர்க்க அரசு உத்தரவிட்டுள்ளது.

முதற்கட்டமாக துாத்துக் குடியில் நல்ல தண்ணி மற்றும் உப்பு தண்ணி தீவு, கீழக்கரையில் அப்பா, தலையாரி தீவு, மண்டபத்தில் குருசடை, சுயல் தீவுகளில் பனங்கொட்டைகள் பதிக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு உள்ளனர்.

இதுகுறித்து வன அலுவலர் கணேசலிங்கம் கூறியதாவது: வெப்பநிலை அதிகரிப்பதால் பனி மலை உருகி, கடலின் நீர் மட்டம் உயர்கிறது. இதனால் தீவுகள் மூழ்கி வருகின்றன. இதை தடுக்க தீவுகளில், கடலில் இருந்து 5 மீட்டரில் பனங் கொட்டைகளை பதிக்கிறோம். பனை மரங்கள் கடல் அரிப்பையும், தண்ணீர் புகுவதையும் தடுக்கும். ஒரு தீவுக்கு 4,000 வீதம் இரண்டு கட்டமாக 24 ஆயிரம் பனங்கொட்டைகள் பதிக்கிறோம் என்றார்.

## நீர் மின் உற்பத்தி அதிகரிக்கும்

மஞ்சூர்:வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால், நீலகிரி மாவட்ட அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. குந்தா, கெத்தை, பைக்காரா, மாயார் உள்ளிட்ட அணைகளில் முழு கொள்ளளவில் தண்ணீர் சேமிக்கப்பட்டுள்ளது.மாவட்டத்தில் அமைந்துள்ள, 12 நீர் மின் நிலையங்கள் மூலம், தினமும், 833.65 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ள முடியும்.தற்போது மழை பெய்து வரும் நிலையில், அணைகளிலும் தண்ணீர் இருப்பதால், முழு உற்பத்தி திறன் அளவுக்கு, மின்சாரம் உற்பத்தி செய்யும்படி, மின் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

## கடலோர மாவட்டங்களில் கனமழை

சென்னை : தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் விடியவிடிய கனமழை பெய்து வருகிறது. பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருவதால் சென்னையின் பல இடங்களில் மரங்கள் சாலையில் விழுந்தன. தொடர் மழையால் தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது.

## திருவண்ணாமலை பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை

திருவண்ணாமலை : தொடர்மழை காரணமாக திருவண்ணாமலை பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். முன்னதாக சென்னை, விழுப்புரம், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள பள்ளி, கல்லூரிகளுக்கும் இன்று விடுமுறை அளித்து அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

## புயலாக மாறும் காற்றழுத்த தாழ்வு நிலை

சென்னை : வங்ககடலில் சென்னைக்கு அருகே நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாற வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரிக்கு கிழக்கு தென்கிழக்கே 300 கி.மீ., தொலைவில் புயல் நிலை

கொண்டுள்ளது. இந்த புயல் சின்னம் மேற்கு வடமேற்காக நகர்ந்து புதுச்சேரி அருகே இன்று (நவ.,9) இரவு கரையை கடக்கும். இதனால் தமிழகத்தின் வடகடலோர பகுதிகளில் மணிக்கு 60 முதல் 70 கி.மீ., வேகத்தில் காற்று வீசக் கூடும். கடல் சீற்றம் அதிகமாக இருக்கும் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் விட்டு விட்டு மழை பெய்யவும் வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### குறைய துவங்கியது துவரம் பருப்பு விலை

பரபரப்பை ஏற்படுத்திய துவரம் பருப்பு விலை குறையத் துவங்கி உள்ளது. வெளிச்சந்தையில், இந்திய பருப்பு, கிலோ, 170 ரூபாய்; தான்சானியா பருப்பு, 125 ரூபாய்க்கு விற்கப்பட்டது.வெளி மாநில வரத்து குறைவு, பதுக்கல் காரணமாக, துவரம் பருப்பு விலை, கிலோ, 225 ரூபாய் வரை உயர்ந்தது.

மக்கள் அதிர்ச்சி அடைந்த நிலையில், பருப்பு இறக்குமதி செய்த மத்திய அரசு, பதுக்கல் மீதும் நடவடிக்கை எடுத்தது. இறக்குமதி பருப்பில், 500 டன் வரை பெற்ற தமிழக அரசு, 1ம் தேதி முதல், கூட்டுறவு கடைகள் மூலம், கிலோ, 110 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறது. இதனால், வெளிச்சந்தையிலும், பருப்பு விலைகள் சரிய துவங்கி உள்ளன. ஒரு வாரத்திற்கு முன், 185 ரூபாய்க்கு விற்கப்பட்ட, இந்திய துவரம் பருப்பு, 170 ரூபாயாக குறைந்தது.

தான்சானியா பருப்பு, கிலோ, 150 ரூபாயில் இருந்து, 125 ரூபாயாக குறைந்துள்ளது. தான்சானியா இரண்டாம் ரக பருப்பு, கிலோ, 115 ரூபாய்க்கு கிடைக்கிறது. ஒரு வாரத்தில், கிலோவுக்கு, 25 ரூபாய் வரை பருப்பு விலை குறைந்துள்ளது.

## வரத்து குறைவு: தக்காளி கிலோ ரூ. 60

பழநி:பழநி பகுதியில் மழையால் தக்காளி வரத்து குறைந்து, ஒரு வாரத்தில் இருமடங்காக விலை உயர்ந்துள்ளது.

தக்காளி அழுகி தரமில்லாமல் உள்ள காரணத்தால், உழவர்சந்தையில் தற்போது 1300 முதல் 1500 கிலோ வருகிறது. மார்க்கெட்டில் ஒருபெட்டி ரூ.650 (15கிலோ) வரை விலைபோகிறது. உழவர் சந்தையில் கிலோ ரூ.50-55, கடைகளில் சில்லரை விலைக்கு கிலோ ரூ.60 வரை விற்கப் படுகிறது.

## மழையால் நொய்யல் ஆற்றில் நீர்வரத்து:நிரம்பி வழிகின்றன தடுப்பணைகள்



திருப்பூர்:வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், நொய்யல் ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது; இதனால், தடுப்பணைகள் நிரம்பி வழிகின்றன.

நம் மாவட்டத்தில், வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. நேற்று முன்தினம் காலை முதல், நேற்று காலை வரை, திருப்பூரில், 3.20 மி.மீ., உடுமலை, 2; பல்லடம், 12 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மற்ற பகுதிகளில், லேசான மழையே இருந்தது.மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் கோவையில் பெய்த கனமழையால், நொய்யல் ஆற்றில் வெள்ளப்

பெருக்கு ஏற்பட்டுள்ளது. திருப்பூர் பகுதியில் உள்ள செம்மாண்டம்பாளையம், ஆண்டி

பாளையம் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது; சாமளாபுரம் குளத்துக்கு தண்ணீர் வரத்து, குறைவாகவே உள்ளது.இக்குளத்தின் உபரி நீரால் நிரம்பும் பள்ளபாளையம் குளமும், தண்ணீரின்றி காணப்படுகிறது. குளத்துக்கு வரும் வாய்க்கால் முழுவதும், ஆகாயத்தாமரை படர்ந்துள்ளதால், நீர் வரத்து தடைபட்டுள்ளது.நீர்வரத்தால், ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒட்டணை மற்றும் நல்லம்மன் தடுப்பணைகள் நிரம்பி வழிகின்றன. ஆற்றின் இரு கரை

களையும் தொட்டபடி, நீர் செல்கிறது.

நேற்று முன்தினம் இரவு, புத்தூர் மற்றும் அணைப்பாளையம் தரைப்பாலத்துக்கு மேல், வெள்ளம் சென்றது. நேற்று பகலில், நீர் வரத்து குறைந்தது.

விவசாயிகள் கூறுகையில், "வழக்கமாக, நவ., - டிச., மாதங்களில் சாமளாபுரம் குளம் நிரம்பி, பள்ளபாளையம் குளத்துக்கு தண்ணீர் செல்லும். இந்தாண்டு இதுவரை, சாமளாபுரம் குளத்துக்கே தண்ணீர் கிடைக்கவில்லை.இவ்விரு குளங்களையும் நம்பி, 3,000 ஏக்கர் நிலங்களில், இறவை

பாசனம் நடைபெறுகிறது. ராஜ வாய்க்காலில், ஆகாயத்தாமரை படர்ந்துள்ளதால், தண்ணீர் வரத்து தடைபட்டுள்ளது.குளத்தின் மொத்த கொள்ளளவில், 40 சதவீதம் கூட, தண்ணீர் இல்லை. மாவட்ட நிர்வாகம் தலையிட்டு, சாமளாபுரம் குளத்துக்கு நீர் வரும் வாய்க்காலை தூர்வாரி சுத்தப்படுத்தி, தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், "மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

பெய்யும் கனமழையால், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கோவை பகுதியில் உள்ள வழியோர கிராமங்களுக்கு, வெள்ள எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.திருப்பூர் பகுதியில் உள்ள குளங்களுக்கு நீர் திருப்பி விடப்பட்டுள்ளது. எனினும், திருப்பூர் பகுதிகளில், வெள்ள பாதிப்பு ஏற்படவில்லை. தொடர்ந்து மழை பெய்தால், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும்' என்றனர்.

**மாவட்டத்தில் 32 கண்மாய்கள் நிரம்பியதால் மகிழ்ச்சி! உழவு பணிகளை துவக்கிய விவசாயிகள்...**



மதுரை : தொடர் மழையால், மதுரை மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின்கீழ் உள்ள 32 கண்மாய்கள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தற்போது பருவமழை துவங்கிவிட்டதால், மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. நீர் நிலைகளில் தண்ணீர் நிரம்பி வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கள்ளந்திரி, சிட்டம்பட்டி, புலிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், முதல்போக சாகுபடி அறுவடை பருவத்தை எட்டியுள்ளது.மேலும், கண்மாய்களில் போதிய தண்ணீர் நிரம்பி வருவதால், உழவு பணிகளில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். வறட்சியாக காணப்பட்ட, அலங்காநல்லூர், பாலமேடு, சோழவந்தான் உள்ளிட்ட சுற்றுவட்டார விவசாய நிலங்கள் மழையால் பசுமையாக காணப்படுகின்றன.

மழையால் நிரம்பிய கண்மாய்கள்: பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் (பெரியாறு வைகை கோட்டம்) 197 கண்மாய்கள் உள்ளன. சமீபத்திய மழையால் குலமங்கலம், வடுகபட்டி, பூதக்குடி, அதலை, குமாரம், பொதும்பு உள்ளிட்ட 32 கண்மாய்கள் நிரம்பின. நிரம்பும் நிலையில் 8 கண்மாய்கள், 22 கண்மாய்கள் 50 சதவீதம், 175 கண்மாய்கள் 25 சதவீதம் நிரம்பியுள்ளன.

அதிகாரி ஒருவர் கூறுகையில், "அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரையை சுற்றியுள்ள பல கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. விவசாயிகள் உழவு பணிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்து மழை பெய்வதால், பெரும்பாலான கண்மாய்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது, என்றார்.

* * * மதுரையை சுற்றியுள்ள பல கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. விவசாயிகள் உழவு பணிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்து மழை பெய்வதால், பெரும்பாலான கண்மாய்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது. * * *

## காய்கறி கமிஷன் கடை, தினசரி மார்கெட்டுக்கு 2 நாள் விடுமுறை! ""ப்ரெஸ்" காய்கறிகளை இன்றே வாங்குங்கள்

தேனி : தேனி மாவட்டம் முழுவதும் இரண்டு நாட்களுக்கு காய்கறி கமிஷன் கடைகள், தினசரி மார்க்கெட்டுகளுக்கு விடுமுறை விடப்படுகிறது. மூன்று நாட்களுக்கு பிறகு தான் தினசரி மார்கெட்டில் "ப்ரெஸ்' காய்கறிகள் கிடைக்கும். எனவே வீட்டிற்கு தேவையான காய்கறிகளை இன்றே வாங்கி விடுங்கள்.

தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களான காய்கறிகள் அதிகம் சாகுபடியாகிறது. விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகள் தினமும் தேனி, தேவாரம், சின்னமனூர், ஆண்டிபட்டி உள்ள காய்கறி ஏல கமிஷன் கடைகளுக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கிருந்து சிறு வியாபாரிகள் காய்கறிகளை ஏலம் எடுத்து தினசரி மார்கெட்டில் விற்பனை செய்கின்றனர்.

நாளை தீபாவளி பண்டிகை என்பதால் விவசாயிகள் இன்றே தோட்டங்களில் காய்கறி எடுக்கும் பணியில் ஈடுபடப்போவதில்லை என தெரிவித்துள்ளனர். இதனால் தேனி தினசரிசந்தை, கமிஷன் கடைக்கு இன்றும், நாளையும் விடுமுறை விடப்படுகிறது என அறிவித்துள்ளனர். இதே நிலை அனைத்து ஊர்களிலும் காணப்படுகிறது. இரண்டு நாட்கள் கமிஷன் கடைகள் செயல்படாததால் தினசரி மார்கெட்டிற்கு இரு நாட்களுக்கு "ப்ரெஷ்' காய்கறிகள் வரத்து இருக்காது. தீபாவளியன்று பல ஊர்களில் தினசரி காய்கறி மார்க்கெட் செயல்படாது. செயல்பட்டாலும் "பிரெஸ்' காய்கறிகள் கிடைக்காது.

தீபாவளி முடிந்து அடுத்த நாள் 11ம் தேதி புதன்கிழமை தோட்டங்களில் இருந்து காய்கறிகள் பறிக்கப்படும். அன்று மாலை நடக்கும் ஏலத்தில் காய்கறி வாங்கி 12ம் தேதி வியாழக்கிழமை தான் தினசரி மார்கெட்டில் புத்தம், புது "ப்ரெஷ்' காய்கறி கிடைக்கும். தீபாவளிக்கு மறுநாள்

அமாவாசை வருகிறது. இந்த இரண்டு நாட்களும் சைவம் மட்டுமே சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் தங்கள் பயன்பாட்டிற்கு தேவையான காய்கறிகளை இன்றே வாங்கி வைத்து கொள்வது நல்லது.

காய்கறி விலை ஏற்றம்: மழையால் தக்காளி வரத்து குறைந்து வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ.65க்கு விற்றது. என்ன விலை இருந்தாலும் தக்காளி இன்றி சமையல் ருசிக்காது என கூடுதல் விலை கொடுத்தும் வாங்கினர். இதேபோல் மற்ற காய்கறிகளின் விலைகளும் அதிகமாக இருந்தது.

உழவர்சந்தையில் விலை குறைவு:

தேனி உழவர் சந்தையில் நேற்று தக்காளி கிலோ ரூ.45க்கு விற்றது. நேற்று காலை உழவர் சந்தைக்கு வந்த 4,170 கிலோ தக்காளியும், விலை குறைவு என்பதால் ஒரு மணிநேரத்தில் விற்று தீர்ந்தது. வெளி மார்க்கெட்டில் கிலோ 60க்கு விற்ற சின்ன வெங்காயம் உழவர் சந்தையில் ரூ.48க்கு விற்றது. வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ.50க்கு விற்ற பெல்லாரி உழவர் சந்தையில் கிலோ ரூ.50க்கு விற்றது. உழவர் சந்தைக்கு வந்த1320 கிலோ சின்ன வெங்காயமும், 1560 கிலோ பெல்லாரியும் ஒரு மணி நேரத்தில் விற்றது. தரமான முருங்கை கிலோ ரூ.80க்கும் ஒரு முருங்கை ரூ.8க்கும் விற்றது. புடலங்காய் விறை குறைந்து கிலோ ரூ.12க்கும், கத்தரிக்காய் கிலோ ரூ.15க்கும் விற்றது.

## விலை உயர்வால் மலர்களுக்கு கிராக்கி! பருவமழையால் வரத்து குறைவு

உடுமலை: முகூர்த்தம் மற்றும் பண்டிகை சீசனையொட்டி, நுகர்வு அதிகரித்துள்ள நிலையில், பருவமழை காரணமாக, வரத்து குறைந்து, உடுமலையில், பூக்களின் விலை கிடு..கிடு.. வென உயர்ந்து வருகிறது.

உடுமலை பகுதிக்கு, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மற்றும் வத்தலகுண்டு போன்ற பகுதிகளில், பூக்கள் வரத்து உள்ளது. மல்லி, முல்லை, செவ்வந்தி, ஜாதிமல்லி, ரோஜா உட்பட பூக்கள், உடுமலைக்கு கொண்டு வரப்பட்டு, புறநகர் பகுதிக்கு விற்பனைக்கு அனுப்பபடுகிறது.

வடகிழக்கு பருவமழை காரணமாக, கடந்த சில நாட்களாக, பூ வரத்து வெகுவாக குறைந்துள்ளது. செடிகளில், பூ உதிர்தல் மற்றும் நோய்த்தாக்குதல் காரணமாக, தரமான பூக்களும் உற்பத்தியாவதில்லை என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால், நிலக்கோட்டை மற்றும் வத்தலக்குண்டு போன்ற, மொத்தமாக கொள்முதல் செய்யும் பூ மார்க்கெட்டுகளுக்கே குறைந்த அளவே பூக்கள் வரத்து உள்ளது. வரத்து குறைந்ததால் அனைத்து பூக்களின் விலையும் உயர்ந்து வருகிறது. பண்டிகை மற்றும் முகூர்த்த சீசன் காரணமாக, நுகர்வு அதிகரித்துள்ள நிலையில் வரத்து குறைவால், உடுமலை பகுதியில் பூ விலை பல மடங்கு உயர்ந்துள்ளது.

மல்லி விலை கிலோ, 1,000 ரூபாய் என உயர்ந்துள்ளது. முல்லை, செவ்வந்தி, ஜாதிமல்லி மற்றும் ரோஜா பூக்களின் விலையும் உயர்ந்து வருகிறது. உடுமலை பூ வியாபாரிகள் கூறுகையில், 'முகூர்த்த சீசனில், மல்லி விலை உயர்வது தொடர்கதையாக உள்ளது. உள்ளூர் உற்பத்தி இல்லாததே இதற்கு முக்கிய காரணமாகும். பருவமழை சீசனுக்கு பிறகு, விலை நிலவரம் சீராகும் வாய்ப்புள்ளது,' என்றனர்.

**பழங்களும் விலை உயர்வு**

பூக்களுக்கு அடுத்து, பண்டிகை மற்றும் முகூர்த்தங்களில் முக்கிய இடம் பிடிப்பது பழங்களே. வரத்து குறைவு மற்றும் மழைக்காலம் போன்ற காரணங்களினால் பழங்களும் விலை 10 சதவீதம் வரை விலை உயர்ந்து காணப்படுகிறது. பண்டிகை காலங்களில் வாழைப்பழங்களின் தேவை

அதிகமாகவே உள்ளது. வாழைப்பழங்கள் கேரளாவில் இருந்து தான் அதிகளவில் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. கேரளாவில் மழையால் வரத்து குறைந்து வாழைப்பழங்களின் விலையும் உயர்ந்து காணப்படுகிறது. அனைத்து பொருட்களின் விலையும் அதிகரித்து உள்ளதால், முகூர்த்தம் மற்றும் பண்டிகை காலங்கள் என்பதால் பொதுமக்களின் நுகர்வு மிகவும் குறைந்து வருகிறது.

**தேங்கிய மழை நீர் வெளியேற்றம்**

புதுச்சேரி:கிருஷ்ணா நகர் பகுதியில் தேங்கிய மழைநீர் எதிர்கட்சி தலைவர் வைத்திலிங்கம் முன்னிலையில் பொக்லைன் இயந்திரம் மூலம் வெளியேற்றப்பட்டது.

புதுச்சேரி கிருஷ்ணா நகர் 20வது குறுக்கு தெருவில் தற்போது பெய்து வரும் கனமழையால் மழைநீர் தேங்கி அப்பகுதி வீடுகளில் புகுந்தது. தகவலறிந்த எதிர்கட்சி தலைவர் வைத்திலிங்கம் சென்று , உடனடியாக பொக்லைன் இயந்திரம் மூலம் தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.வட்டார காங்., தலைவர் ஜெகன், தொகுதி செயலாளர் ஜான், முரளி, யுவராஜ், சிவா உடனிருந்தனர். இதேபோல், 12வது குறுக்கு தெரு, 14வது குறுக்கு தெரு விரிவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கிய மழைநீர் வெளியேற்றப்பட்டது.

**கடும் மழை எதிரொலியால்சண்டே மார்க்கெட்டில் விற்பனை 'டல்'**

புதுச்சேரி:புதுச்சேரியில் நேற்று பெய்த கடும் மழையால், தீபாவளிக்கு பொருட்கள் வாங்க முடியாமல் மக்கள் தவித்தனர். விற்பனை பாதித்து வியாபாரிகள் கவலையில் ஆழ்ந்தனர்.

வங்க கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத் தால், தமிழகம், புதுச்சேரியில், இரு தினங்களுக்கு கன மழை கொட்டும்' என,

வானிலை மையம் அறிவித்தது. நேற்று முன்தினம் இரவு முதல் புதுச்சேரியில் மழை பெய்கிறது.

விற்பனை பாதிப்பு:தீபாவளிக்கு ஒரு நாள் மட்டுமே உள்ள நிலையில், மளிகை, இனிப்பு, ஜவுளிக் கடைகளில் விற்பனை களை கட்டும். ஆனால், தொடந்து மழை பெய்வதால், மக்கள் வெளியே வர முடியாமல் தவித்தனர். நேரு வீதி உட்பட அனைத்து கடை வீதிகளில் வழக்கமான கூட்டம் இல்லாமல் விற்பனை பாதித்தது.பல லட்சம் முதலீடு செய்து பட்டாசு கடை வைத்துள்ள வியாபாரிகள் பாதித்தனர்.சண்டே மார்க்கெட் 'டல்'புதுச்சேரி காந்தி வீதியில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடக்கும் 'சண்டே மார்க்கெட்' அறியாதவர்களே இருக்க மாட்டார்கள். துணிகள், வீட்டிற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும். 1974-ம் ஆண்டு துவக்கிய இந்த மார்க்கெட்டில் தற்போது 700 கடைகள் வரை வைத்து வியாபாரம் நடக்கிறது. கடலூர், விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி உள்ளிட்ட பல பகுதிகளில இருந்தும் பொதுமக்கள் வருவர். வழக்கமான ஞாயிற்றுக் கிழமையை விட, தீபாவளி பண்டிகையின் போது சண்டே மார்க்கெட் கூட்டம் அலைமோதும்.நேற்றும் வழக்கம் போல் பொருட்கள் வாங்க மக்கள் குவிந்தனர். ஆனால் தொடர் மழையால், பொருட்கள் வாங்க முடியாமல் தவித்தனர். இதனால் சண்டே மார்க்கெட்டில் வியாபாரம் பெரிதும் பாதித்தது. மழை நின்றால் பொருட்கள் வாங்குவதும், பெய்தால் கடை ஓரங்களில் ஒதுங்கினர்.தீபாவளிக்கு நல்ல வியாபாரம் செய்து வருவாய் ஈட்டலாம் என காத்திருந்த சண்டே மார்க்கெட் வியாபாரிகள் மழையால் விற்பனை பாதித்து கவலையில் ஆழ்நதனர்.

**கனமழையால் வியாபாரிகள் தவிப்பு**

காரைக்கால்:காரைக்கால் மாவட்டத்தில் கன மழையால் வாரச் சந்தையில் காய்கறிகள் வாங்க முடியாமல் மக்கள் தவித்தனர்.காரைக்கால்

மாவட்டத்திற்கு திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் பகுதியில் இருந்து காய்கறிகள் வருகின்றன. ஞாயிற்றுக் கிழமை களில் நகராட்சி திடலில் இயங்கும் வாரச் சந்தை ஏழை, நடுத்தர மக்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது.

காரைக்காலில் சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. நேற்றும் மழை பெய்ததால் வார சந்தை வளாகத்தில் மழை நீர் தேங்கி வியாபாரிகள் பாதித்தனர்.

நேற்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு வார சந்தை நடந்தது. மழையால் வியாபாரிகள் திருநள்ளார் சாலை, மேலகாசாகுடி சாலையோரத்தில் காய்கள் விற்றனர்.

### சிறுதானிய உணவு திருவிழா

திருத்தணி:அழிந்து வரும் சிறுதானியங்களை காப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, பாரம்பரிய சிறுதானிய உணவு திருவிழா நடந்தது.

திருத்தணி அடுத்த, ராமாபுரம் பகுதியில், கிராம பெண்கள் விடுதலை இயக்கம் சார்பில், பாரம்பரிய சிறுதானிய உணவு திருவிழா, சங்கத் தலைவி தனம்மா தலைமையில் நடந்தது. அதில், சிறுதானியங்களில் செய்யப்பட்ட எள்ளு சிமிழ், கேழ்வரகு புட்டு, கொள்ளு, துவரை, காராமணி மற்றும் வேர்க்கடலை சுண்டல், தினை பாயசம், முருங்கை கீரை பொரியல், பப்பாளி கொய்யா, சப்போட்டா ப்ரூட் சாலட், போன்ற உணவு வகைகளை, கிராம வாசிகள் முன்னிலையில்

தயாரித்து, அவர்களுக்கு வழங்கி, சிறுதானியங்கள் அழிந்து வருவதை தடுக்க வேண்டும் என, விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில், 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## இயந்திரம் மூலம் நெல் நடவு முறைவேளாண் இணை இயக்குனர் ஆய்வு

விழுப்புரம்;பெரும்பாக்கத்தில் நடந்த இயந்திரம் நெல் நடவு செயல் விளக்க முகாமை வேளாண்மை இணை இயக்குனர் நேரில் ஆய்வு செய்தார்.காணை ஒன்றியம், பெரும்பாக்கத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செயல் விளக்க முகாம் நடந்தது.இவற்றை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசபாபதி நேரில் பார்வையிட்டு, விவசாயிகளிடம் திட்டம் குறித்து விளக்கி கூறினார்.இதில், விவசாயிகள் பழைய நெல் சாகுபடி முறையில் செய்வதற்கு பதிலாக, 14 நாட்கள் வயதுடைய தட்டு நாற்றாங்காலில் விடப்பட்ட ,நெல் நாற்றுக்களை இயந்திரம் மூலம் நடவு செய்ய வேண்டும். இதற்கு ஏக்கருக்கு 15-20 கிலோ விதை போதுமானது. இந்த முறையில் நெல் நடும் விவசாயிக்கு அரசு மானியமாக ஒரு ஏக்கருக்கு 1,600 ரூபாய் வீதம், ஒரு விவசாயிக்கு 5 ஏக்கருக்கு மானியம் வழங்கப்படும். இந்த தொகை விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும் என ரத்தினசபாபதி கூறினார்.
காணை வேளாண்மை உதவி இயக்குனர் குமாரி ஆனந்தி, வேளாண்மை அலுவலர் பாலமுருகன், துணை வேளாண்மை அலுவலர் ராமமூர்த்தி, உதவி விதை அலுவலர் சுந்தர், உதவி தொழில்நுட்ப மேலாளர் இளங்கோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விடிய விடிய கொட்டிய கனமழையால் சோளப்பயிர் சேதம்: விவசாயிகள் சோகம்

புன்செய் புளியம்பட்டி: புன்செய் புளியம்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு, 8 மணிக்கு தொடங்கிய மழை அதிகாலை, 3 மணி வரை கொட்டி தீர்த்தது. இதனால் மாதம்பாளையம் ரோட்டிலிருந்து மழைநீர், கோவை மெயின் ரோட்டில், திரு.வி.க., கார்னர் பகுதியில், சாக்கடையுடன் கலந்து பெருக்கெடுத்து ஓடியது. மக்கள்

பெரும் சிரமத்துக்கு ஆளாகினர். வாரச்சந்தை நடுகேட் முன்புறம், வடிகால் வசதி இல்லாததால், மழை வெள்ளம் ரோட்டில் தேங்கியது. இதனால்,போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். இதேபோல் புன்செய் புளியம்பட்டி, பஸ் ஸ்டாண்ட் அருகே, மழைநீருடன் சாக்கடையும் கலந்து ஓடிய வெள்ளம் நகராட்சி கடைகளுக்குள் புகுந்தது. விடியவிடிய அமைதியாக மழை கொட்டியது. இதனால் புங்கம்பள்ளி, கீரியப்பம்பாளையம், பொங்கியானூர் பகுதி வயல் வெளிகளில் மழைநீர் சூழ்ந்தது. சாகுபடி செய்திருந்த சோளப்பயிர்கள் சாய்ந்தன. அதே சமயம் மழையால், நல்லூர், காவிலிபாளையம் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்தது. காராப்பாடி தடுப்பணை நிரம்பி விட்டது.

## அமராவதி அணையை தூர்வார வேண்டும்: நதி நீர் பாசன இயக்கம் வலியுறுத்தல்

ஈரோடு: அமராவதி அணையை தூர் வாரி அதிகளவில் நீரை தேக்கி வைக்க வேண்டும் என்று, நதி நீர் பாசன இயக்கம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமராவதி நதிநீர் பாசன இயக்கத்தின் பொது செயலாளர் லிங்கம் சின்னசாமி விடுத்துள்ள அறிக்கை: அமராவதி நீர் பங்கீடு தொடர்பாக கரூர், திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கு இடையே மோதல் இருந்து வருகிறது. தாராபுரத்தில் இருந்து, 35 கி.மீ தூரத்தில் உள்ளது அமராவதி அணை. உடுமலையில் இருந்து தாராபுரம் வரை பம்ப் செட்கள் அதிகம் இல்லை. அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்தால், நான்கு நாட்களுக்கு பின்னரே கரூர் மாவட்டம் சென்றடைகிறது. வழியில் பம்ப் செட்கள் ஏராளமாக இருப்பதே இதற்கு காரணம். இதுபோன்ற நிலையை தவிர்க்க அமராவதி அணை தூர்வாரப்பட வேண்டும். அணையில் தேங்கியுள்ள வண்டல் மண், சேறு,

சகதியை அள்ள வேண்டும். அப்போது தான் அதிகளவில் நீரை தேக்கி வைக்க முடியும். மேலும் குளம்,குட்டைகளில் நீர் நிரப்ப முடியும். அமராவதி அணையில் இருந்து உபரி நீரை கரூர் மாவட்ட குளம், குட்டைகளை நிரப்ப, மராமத்து பணிகளை உடனடியாக அரசு மேற்கொள்ள வேண்டும். நல்லாறு அணை திட்டத்தில், 14 கி.மீ., பணியை, அரசு உடனே துவக்கினால், ஆறு டி.எம்.சி.,க்கு மேல் அமராவதி அணைக்கு வந்து சேரும். இதை அதிகாரிகள் உணர்வதில்லை. இவற்றை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 1 கிலோ மல்லிகைப்பூ ரூ.750: சத்தி விவசாயிகள் பூரிப்பு

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில், 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல், விவசாயிகள் மல்லிகைப்பூ பயிரிட்டுள்ளனர். நாள் ஒன்றுக்கு, 10 டன் மல்லிகைப்பூ உற்பத்தியாகிறது. சத்தியமங்கலத்தில் இருந்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கர்நாடகா மாநிலம் மைசூர் மற்றும் மும்பை வரை விற்பனைக்கு செல்கிறது. தீபாவளியை முன்னிட்டு, கடந்த இரண்டு நாட்களில் மல்லிகைப்பூ விலை உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம், ஒரு கிலோ, 600 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில் நேற்று, 750 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம் கிலோ, 150 ரூபாய்க்கு விற்றது. இப்போது 5 மடங்கு விலை கிடைப்பதால் விவசாயிகள் பூரிப்பு அடைந்துள்ளனர்.

## நுண்ணீர் பாசன திட்டம் விரைவில் வரும்:கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு

ஊட்டி:மாவட்டத்தில், 711 ஏக்கர் பரப் பில், மத்திய அரசின், நுண்ணீர் பாசன திட்டம் செயல்பாட்டுக்கு வரவுள்ளது.பிரதமரின் வேளாண்மை நீர் பாசனத் திட்டத்தின் கீழ், தெளிப்பு, சொட்டு நீர் பாசனத்தை ஊக்குவிக்க,

மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி, காய்கறி சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம், பிற விவசாயிகளுக்கு, 75 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் அறிக்கை: நடப்பாண்டு, நீலகிரி மாவட்டத்தில், 711 ஏக்கர் பரப்பளவில் தெளிப்பு, சொட்டு நீர் பாசனக் கருவிகள் வழங்க, 62.70 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்களது பெயர்களை, தாங்களாகவோ, வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திலோ, கம்ப்யூட்டரில் பதிவு செய்ய வேண்டும்.நுண்நீர் பாசனக் கருவிகளை தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை முகமையால் அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்களிடம் இருந்து, விவசாயிகளே நேரடியாக, முழு தொகைØயும் செலுத்தி, பாசன கருவிகளை பெற்று அதற்குண்டான மானிய விண்ணப்பங்களை அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.

பின்னேற்பு மானியம், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் விடுவிடுக்கப்படும். தவிர, அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர் பாசன நிறுவனங்களே விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனக் கருவிகள் வழங்கும் பட்சத்தில், மானியத் தொகை நுண்ணீர் பாசன நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

மாவட்ட விவசாயிகள், தோட்டக்கலை துறை களப் பணியாளர்களை தொடர்பு கொண்டு, விண்ணப்பப் படிவங்களை பெற்று, திட்டத்தில் பயன் பெற வேண்டும். இவ்வாறு, சங்கர் கூறியுள்ளார்.

விதிமுறைகள் என்ன?* விண்ணப்பதாரர், தனது பெயரில் உள்ள நிலத்திற்கு, வருவாய் துறையிடம் இருந்து பெறப்பட்ட நில வரைபடம், சர்வே எண், மொத்த பரப்பு விபரம் அடங்கிய சான்றுகளை சமர்பிக்க வேண்டும்.

* தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்ட அனுபோக சான்று; மத்திய அரசின் நுண்ணீர் திட்டத்தில், இதுவரை மானியம் பெறவில்லை என்பதற்கான சான்று.

* தண்ணீர் வசதி இல்லாத விவசாயி, அருகில் உள்ள விவசாயிகளின் கிணற்றில் இருந்து நீரை உபயோகித்தால், சம்மந்தப்பட்ட விவசாயியிடம் இருந்து சம்மத கடிதம்.

* மண், நீர் மாதிரிகளின் ஆய்வறிக்கை. மூன்றாண்டுக்கு, நுண்நீர் பாசனம் அமைக்கப்பட்ட இடத்தை விற்க, குத்தகையில் விட மாட்டேன் என்ற ஒப்பந்தம்.

* பயனாளி, தனது தோட்டத்தில் அமைக்கப்பட்ட நுண்நீர் பாசன திட்டத்தை வேளாண்மை, தோட்டக்கலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் பிற துறை அரசு அலுவலர்கள் ஆய்வு செய்ய மூன்று ஆண்டிற்கு, எந்நேரமும் அனுமதிக்க வேண்டும்.

**மஞ்சளார் அணையில் தண்ணீர் திறப்பு: 5,259 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி; தினமலர் நாளிதழ் செய்தி எதிரொலி**

தேவதானப்பட்டி : தினமலர் நாளிதழ் செய்தி எதிரொலியாக தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளார் அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு கலெக்டர் வெங்கடாசலம் தண்ணீர் திறந்து வைத்தார். இதன் மூலம் திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் 5 ஆயிரத்து 259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெற்றுள்ளன.

தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளார் அணையின் உயரம் 57 அடியாகும். தற்போது அணையில் 56.80 அடி நீர் உள்ளது. 392 கனஅடி நீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. 392 கன அடி நீர் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த 30 நாட்களாக ஆற்றில் உபரி நீர் சென்று கொண்டிருக்கிறது.

அணை திறப்பதில் தாமதம்: வழக்கமாக அக்டோபர் 15ம் தேதி பாசனத்திற்கு நீர் திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு அணை 30 நாட்களாக போதிய அளவு நீர் இருந்தும் திறப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் டி.வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, தேவதானப்பட்டி பகுதியில் 30 நாட்களுக்கு முன்பு விவசாயிகள் நாற்றாங்கால் தயார் செய்தனர். நாற்றுக்கள் நடவு செய்ய தயாராக இருந்தது. ஆனால் உரிய நேரத்தில் பாசனத்திற்கு நீர் திறக்காததால் நாற்றுகள் காய்ந் தன. காய்ந்து வரும் நாற்றுகளை காப்பாற்றுவதற்கு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று தினமலர் நாளிதழில் படத்துடன் செய்தி வெளியானது.

அணை திறப்பு; இந்நிலையில் நேற்று காலையில் கலெக்டர் வெங்கடாசலம் முதல்போக நெல் சாகுபடிக்கு மஞ்சளார் அணையில் இருந்து நீரை திறந்து வைத்தார். தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுகாவில் 3 ஆயிரத்து 148 ஏக்கர், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் 2 ஆயிரத்து 111 ஏக்கர் நிலங்களுக்கு பயன் பெறும் வகையில் பழைய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு விநாடிக்கு 200 கனஅடி, புதிய பாசன ஆயக்கட்டு நிலங்களுக்கு வினாடிக்கு 40 கன அடி நீரும் திறந்து விடப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் பொன்னம்மாள், பெரியகுளம் ஆர்.டி.ஓ., ஜானகி, தாசில்தார் ரமேஷ், கம்பம் நகராட்சி தலைவர் சிவக்குமார், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் மகாலிங்கம், பெரியகுளம் ஒன்றியத் தலைவர் செல்லமுத்து மற்றும் செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் செல்வம், உதவிப் பொறியாளர் சென்ராம் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### கோம்பை பகுதியில் மழை; நிரம்பிய தடுப்பணைகள்

தேவாரம் : கோம்பை பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் மலையடிவாரத்தை ஒட்டியுள்ள 400க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் நிரம்பி வழிகின்றன.

கோம்பை மலையடிவாரத்தை ஒட்டி பொதுப்பணித்துறை, தோட்டக்கலை பொறியியல் துறை, வனத்துறை மற்றும் விவசாயிகள் பங்களிப்புடன் 400க்கும் மேற்பட்ட இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள் ளன. சில நாட்களாக கோம்பை பகுதியில் பெய்யும் தொடர் மழையால் இந்த தடுப்பணைகள் முழுவதும் நிறைந்து மறுகால் பாய்கின்றன. கொதம்பலூத்து, செங்கந்துறையில் உள்ள சிறு அணைகள் நிறைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பதினெட்டாம் கால்வாய் விவசாயிகள் சங்க தலைவர் ராமராஜ் கூறுகையில், "கோம்பை வனப்பகுதியில் பெய்யும் மழைநீர் வீணாகாமல் தடுப்பதற்காக தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. கொதம்பலூத்து சிறு அணை உள்ளிட்ட நீர்தேக்கங்கள் நிறைந்துள்ளதால் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது. பதினெட்டாம் கால்வாயில் இந்த ஆண்டிற்கான தண்ணீர் திறக்கப்பட்டால் விவசாயிகள் மகிழ்ச்சியடைவார்கள்,' என்றார்.

### கடலை பயிர்கள் செழிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

கமுதி: கமுதி சுற்றுவட்டாரப் பகுதிகளான பாக்குவெட்டி, கருங்குளம், மருதங்கநல்லூர், பசும்பொன், நெடுங் குளம் உட்பட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் செம்மண் பகுதி என்பதால் வேர் கடலை சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது. இதனால் ஆண்டுதோறும் வேர்கடலை சாகுபடி அதிகமாக நடக்கும். இந்த ஆண்டும் பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் வேர்கடலை சாகுபடி செய்துள்ளனர். சில நாட்களாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பரமக்குடியில் தொடர் மழை தீபாவளி விற்பனை மந்தம்

பரமக்குடி: பரமக்குடியில் நேற்று முழுவதும் சாரல் மழை பெய்ததால் தீபாவளி விற்பனை மந்தமாக இருந்தது. பரமக்குடியில் சிலநாட்களாக மாலை நேரத்தில் தொடர்ந்து மழை பெய்தது. இதனால் தீபாவளி வியாபாரம் பாதிக்கப்பட்டது. தீபாவளிக்கு 2 நாட்கள் முன்னதாக வியாபாரம் சூடுபிடிக்கும் என, வியாபாரிகள் எண்ணி இருந்தனர். இதற்காக தேவையான ஏற்பாடுகளை கடை உரிமையாளர்கள் செய்திருந்தனர். நேற்று முழுவதும் சாரல் மழை பெய்ததால் மக்கள் வெளி யேறாமல் வீட்டிலேயே முடங்கினர். இதனால் வியாபாரம் மந்தமாக இருந்ததாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## மானியத்தில் விவசாய கருவிகள்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சார்பில் மானிய விலையில் விவசாய கருவிகள் வழங்கப்படுகின்றன. வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்டத்தில் நெல் விவசாயிகளுக்கு மானியத்தில் விவசாய கருவிகள் வழங்கப்படுகின்றன. இதில் விதையிடும் கருவிகள் 50 சதவீதம் மானியத்திலும், 20 குதிரை திறனுக்கு மேற்பட்ட டிராக்டருக்கு ரூ.1.25 லட்சம் மானியத்திலும் வழங்கப்படுகின்றன. தேவைப்படுவோர் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குனர்களிடம் பயிர் சாகுபடி அடங்கல் சான்று, ரேஷன் கார்டு, சிட்டா நகல் மற்றும் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கலாம். முன்னுரிமை அடிப்படையில் விதையிடும் கருவிகள் வழங்கப்படும், என்றார்

## தொடர் மழையால் நிறைந்தது புதுக்குளம் கண்மாய்

ராஜபாளையம்: தொடர் மழையால் ராஜபாளையம் அருகே புதுக்குளம் கண்மாய் நிறைந்து, பிரண்டைக்குளம் கண்மாய்க்கு தண்ணீர் செல்கிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர், ராஜபாளையம்

அய்யனார்கோயில் ஆற்றில் தடுப்பணை அமைத்து, கோடை கால நீர் தேக்கத்தில் சேமிக்கப்படுகிறது. ஆற்றின் மற்றொரு பகுதி தண்ணீர் முடங்கியார் ஆறு, மறிச்சுகட்டி ஆறு வழியாக சுற்றுப்புற கண்மாய் களுக்கு செல்லும். தேக்கத்தின் கொள்ளளவு 23 அடியாக இருந்தாலும், 18 அடி நீர் தான் சேமிக்கப்படுகிறது. கடந்த பத்துநாட்களில் மேற்கு தொடர்ச்சி மலையில் மழை பெய்ததால், வறண்டு கிடந்த அய்யனார்கோயில் ஆற்றில் நீர்வரத்து அதிகமானது. இதன் மூலம் தேக்கத்தில் 18 அடி தண்ணீர் சேமிக்கப்பட்டது. தற்போது பயன்பாட்டிற்கு வராத புதியதேக்கத்தில் தண்ணீர் சேமிக்கப்பட்டு வருகிறது.

நிரம்பியது கண்மாய்

இந்நிலையில் முடங்கியார் ஆற்றில் செல்லும் தண்ணீர் மூலம் புதுக்குளம் கண்மாய் இருநாட்களுக்கு முன் நிரம்பியது. இங்கிருந்து தாலுகா அலுவலகம் எதிரே உள்ள பிரண்டைக்குளம், அதன் எதிரே உள்ள புளியங்குளம் கண்மாய்களுக்கு தண்ணீர் சென்றுகொண்டு இருக்கிறது. மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் ராஜபாளையம் நகர் பகுதியில் தொடர்மழை பெய்தால் மற்ற கண்மாய்களும் நிரம்ப வாய்ப்பு உள்ளது. விவசாயி கோமதி, ""அய்யனார்கோயில் ஆற்றில் இருந்து தண்ணீர் முதலில் புதுக்குளம் கண்மாய்க்கு தான் வரும். இங்கிருந்து படிப்படியாக மற்ற கண்மாய்களுக்கு செல்லும். புதுக்குளம் சிறியகண்மாய் நீரை பயன்படுத்தி 80 ஏக்கருக்கு விவசாய பாசனம் நடைபெறும்," என்றார்.

**பிளவக்கல்லில் 21 மி.மீ., மழை**

விருதுநகர்: மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணிப்படி மழையளவு(மி.மீ.,): சாத்தூர் 10, ஸ்ரீவில்லிபுத்தூர் 4.20, சிவகாசி 4, விருதுநகர் 6, திருச்சுழி 4.4, ராஜபாளையம் 6, காரியாபட்டி 2, வத்திராயிருப்பு 2.60, பிளவக்கல் 21.

## நெல்லையில் விடியவிடிய மழை: அருவிகளில் வெள்ளப்பெருக்கு

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் விடிய விடிய பலத்த மழை பெய்தது. அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துவருகிறது.நெல்லைமாவட்டத்தில் கடந்த சிலதினங்களாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்துவருகிறது. நேற்றுமுன்தினம் மேற்குதொடர்ச்சிமலைப்பகுதிகளிலும் கனமழை பெய்தது. குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதிகபட்சமாக மணிமுத்தாறு மலைக்கு மேல் உள்ள மாஞ்சோலை பகுதியில் 240 மி.மீ,மழை பதிவாகியது. இதனால் நேற்றுமுன்தினம் 66.10 அடியாக இருந்த மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் இரண்டு அடி உயர்ந்து 68 அடியானது.பாபநாசம் அணைப்பகுதியில் 100 மி.மீ.,மழை பதிவானது. பாபநாசம் அணை நேற்றுமுன்தினம் 87.45 அடியில்இருந்து 90 அடியாக உயர்ந்தது. சேர்வலாறு அணை 100.43 அடியில் இருந்து ஒரே நாளில் 6 அடி உயர்ந்து 106.46 அடியாக உயர்ந்தது.சிறிய அணைகளில் ஏற்கனவே கருப்பாநதி அணை நிரம்பிவிட்டது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 74.80 அடியில் இருந்து 83 அடியாக உயர்ந்தது.எனவே விரைவில் நிரம்பும் வாய்ப்புள்ளது. ராமநதி அணையும் 73 அடியில் இருந்து 79 அடியாக உயர்ந்தது.நெல்லை ஜங்ஷன் பகுதியில் மணிமூர்த்தீஸ்வரம் என்னுமிடத்தில் தாமிரபரணி ஆற்றின் அருகே ஒரு ஓடை மீது ஏற்படுத்தியிருந்த தற்காலிக பாதையை காரில் கடக்க முயன்றபோது கார் தண்ணீரில் இழுத்துச்செல்லப்பட்டது. அதில் பயணித்த ஓய்வுபெற்றதுணைதாசில்தார் சிவசுப்பிரமணியன் குடும்பத்தினர், அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். தீயணைப்பு படையினர், பொதுமக்கள் காரை மீட்டனர்.

**மானி இல்லாததால் மழை அளவு தெரிவதில் சிக்கல்**

ஒட்டன்சத் திரம் : ஒட்டன்சத்திரத்தில் மழைமானி இல்லாததால் துல்லியமான மழை அளவை கணக்கிடுவதில் சிக்கல் நீடிக்கிறது.

ஒட்டன்சத்திரம் தாலுகாவில் மலைப் பகுதியில் அமைந்துள்ள பரப்பலாறு அணை,சத்திரப்பட்டி பகுதிகளில் மட்டுமே மழை மானி உள்ளது. தாலுகா அலுவலகத்திலும் மழை மானி வைக்கப்பட்டிருந்தது. பராமரிப்பு இல்லாததால் பயன்பாட்டில் இல்லை. இப்பகுதி விவசாயம் சார்ந்த பகுதியாகும். பல குளம், கண்மாய், ஓடைகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள நங்காஞ்சி ஆற்றில் பலத்த மழை பெய்யும் போது காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். மழை மானி இல்லாததால் மழை குறித்து துல்லியமாக அறிய முடிவதில்லை. சராசரி மழை அளவை கணக்கிடுவதிலும் சிரமம் ஏற்படுகிறது. ஒட்டன்சத்திரத்தில் பெய்யும் மழை அளவு, பரப்பலாறு அணை பகுதி மற்றும் சத்திரப்பட்ட்ட பகுதியில் வைத்துள்ள மழை அளவுகளாக கணக்கு எடுக்கப்படுகிறது. துல்லியமான மழை அளவு கிடைக்க வாய்ப்பில்லை.இப்பகுதியில் மழைமானி ஏற்படுத்தி, அதனை முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சென்னை, புறநகரில் பலத்த மழை**

சென்னை, அதன் புறநகர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. குளிர் காற்றுடன் விடாமல் பெய்த மழையால், சாலைகளில் ஆங்காங்கே வெள்ளம் போல் தண்ணீர் தேங்கியது.தமிழகத்தில் ஒரு வாரம் தாமதத்துக்குப் பின்னர்,

அக்டோபர் 28-ஆம் தேதியன்று வட கிழக்குப் பருவ மழை தொடங்கியது. இருப்பினும், சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் பலத்த மழை பதிவாகியது.பலத்த மழை: சென்னை, புறநகர்ப் பகுதிகளில் அவ்வப்போது சாரலுடன் கூடிய மழை மட்டுமே பெய்தது. இந்த நிலையில், புதிதாக வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி சனிக்கிழமை உருவானது. அது ஞாயிற்றுக்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியது. இதன் காரணமாக, மாநிலம் முழுவதும் தொடர்ந்து 5 நாள்களுக்குப் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.அதன்படி, சென்னை, புறநகரில் அதிகாலை முதலே கரு மேகங்கள் சூழ்ந்து காணப்பட்டன. தேங்கிய மழை தண்ணீர்: பின்னர், குளிர்காற்றுடன் பாரிமுனை, ஈக்காட்டுத்தாங்கல், பல்லாவரம், தாம்பரம், பட்டினப்பாக்கம், மயிலாப்பூர், எழும்பூர், சைதாப்பேட்டை, கிண்டி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், பரங்கிமலை, பழவந்தாங்கல், மடிப்பாக்கம், நங்கநல்லூர், பள்ளிக்கரணை, நீலாங்கரை, துரைப்பாக்கம், பெரும்பாக்கம், மேடவாக்கம், புழுதிவாக்கம், உள்ளகரம், வேளச்சேரி, கொட்டிவாக்கம், கீழ்க்கட்டளை உள்ளிட்ட மாநகரின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து விடாமல் பெய்த மழையால், சாலைகளில் வெள்ளம் போல் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், வாகனங்களை ஓட்டிச் சென்றோர் மிகுந்த அவதிக்குள்ளாயினர். ஆங்காங்கே போக்குவரத்தும் பாதிப்புக்குள்ளாகியது. சில இடங்களில் சாலைகளில் மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பெரும்பாலான இடங்களில் சாலையிலுள்ள பள்ளத்தில் மழை நீர் சூழ்ந்தது. இதனால், பள்ளம், மேடு தெரியாமல் வாகன ஓட்டிகள் பலர் தடுமாறி கீழே விழுந்தனர். தொடர் மழையால், தீபாவளி வியாபாரம் கடும் பாதிப்புக்குள்ளாகியது.

இருப்பினும் தியாகராயநகர், புரசைவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் மழையிலும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பண்டிகைக்கான பொருள்களை வாங்குவதற்காகக் குவிந்தனர்.

**"பிளாஸ்டிக்' வாழ்க்கை!**

இன்றைய நவீன யுகத்தில் "பிளாஸ்டிக்' இல்லாமல் ஒரு நாள் பொழுதைக் கூட நகர்த்த முடியாது போலிருக்கிறது. காலையில் படுக்கையிலிருந்து எழுந்தது முதல் மீண்டும் இரவு படுக்கைக்கு செல்லும் வரையில் மனிதர்கள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஏராளம். "பிளாஸ்டிக் இயற்கைக்கு கேடு விளைவிப்பவை. சுற்றுச்சூழலை மாசுபடுத்துபவை. மனிதர்களுக்கு புற்றுநோய் உள்ளிட்ட கொடிய நோய்களை உண்டாக்கும். எளிதில் அழியாது. எனவே, பயன்படுத்தாதீர்' என என்னதான் கோஷம் போட்டாலும், பிளாஸ்டிக் அரக்கன் அழிந்தபாடில்லை. குறைந்திருக்கிறதா என்றால் கண்ணுக்குத் தெரிந்த வரையில் அப்படியும் தென்படவில்லை.

ஒருபுறம் குறைத்தால், மறுபுறம் புதிய அவதாரத்தில் வந்து நிற்கிறது. தேநீர் கடைகளில் பிளாஸ்டிக் "கப்'க்குப் பதிலாக காகித "கப்' தென்பட்டது. இப்போது, அந்தக் குறையை ஈடு செய்வதுபோல, உணவகங்களில் கொதிக்கும் சாம்பாரையும், குருமாவையும் பிளாஸ்டிக் பையில் கட்டிக் கொடுக்கிறார்கள். கைதாங்க முடியாத சூட்டுடன் காபியையும், டீயையும் கூட பிளாஸ்டிக் பைகளில் கட்டிக் கொண்டு செல்கிறார்கள்.

சாலையோர தேநீர் கடைகளில் ஓர் ஓரத்தில் வடை, பஜ்ஜி, போண்டா சுட்டு விற்பவர்கள், சட்டியில் கொதிக்கும் எண்ணெய்யின் அளவு குறைந்துவிட்டால், இடது கையால் புதிய எண்ணெய்ப் பொட்டலத்தை எடுத்து அதன் ஒரு முனையைக் கொதிக்கும் எண்ணெய்யில் முக்குகிறார்கள்.

அந்த சூட்டில் எண்ணெய் பொட்டலத்தின் முனை கருகி சட்டியில்

எண்ணெய் கொட்டுகிறது. இவர்களுக்கு யாரைப் பற்றியும் கவலை இருப்பதாகத் தெரியவில்லை.

உணவகங்களில் வாழை இலைகளுக்குப் பதில் வெள்ளை நிற பிளாஸ்டிதான் தட்டுக்குமேலே இலையாக இருக்கிறது. அதிலும், பச்சை நிறத்தில், வாழை இலையைப் போன்றே மடக்கி எடுத்துச் செல்லும் வகையில். என்ன ஒரு சாதுரியம்?

சரி, பொட்டலமாக வாங்கிக் கொண்டுபோய் இருப்பிடத்தில் வைத்து சாப்பிடலாம் என்றால் சாதம், சாம்பார், ரசம், மோர், கூட்டு, பொரியல், அவியல் அனைத்தும் பிளாஸ்டிக் பையில்தான்.

முன்பெல்லாம், மளிகை கடைக்குச் செல்வோர் துணிப் பையைக் கொண்டு செல்வர். இப்போது அதை எல்லாம் எடுத்துச் சென்றால் கேவலம் என்ற நினைப்பு. பிளாஸ்டிக் பைகளில் வாங்கி வருகிறோம். கூடவே தீராத வியாதிகளையும் என்பதை மறந்து போகிறோம்.

பிளாஸ்டிக் பையில் சூடான காபி, டீ போன்ற திரவத்தைப் பொட்டலமிடும்போதோ அல்லது கொதிக்கும் எண்ணெய்யில் பிளாஸ்டிக் மேல் உறைகளை முக்கும்போதோ, சூடான உணவுப் பொருள்களை அதில் வைக்கும்போதோ அதிலிருந்து "பிஸ்பினால்-ஏ' (BisphenolA) என்ற வேதிப்பொருள் இயல்பான அளவைவிட சுமார் 55 மடங்கு அதிகமாக வெளியேற்றப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அந்த வேதிப்பொருள் கலந்த உணவுப் பொருள்களை மனிதர்கள் உட்கொள்ளும்போது அவை ரத்த ஓட்டத்தில் கலந்து உடலில் உள்ள நாளமில்லாத சுரப்பிகளின் செயல்பாட்டை மாற்றி அமைக்கின்றன.

அதனால், மூளை கட்டமைப்பில் சேதம், பதற்றம், படிக்கும் குழந்தைகளுக்குப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமை, நோய் எதிர்ப்புத் தன்மை குறைதல், பெண் குழந்தைகள் முன்னமே பூப்பெய்தல், இனப்பெருக்க உறுப்புகளில் பாதிப்பு, மலட்டுத்தன்மை, முறையற்ற பாலின நடவடிக்கை, விந்து திரவ சுரப்பு குறைதல் என எண்ணற்ற

பாதிப்புகள் ஏற்படுவதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மனித வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகிவிட்டது இந்த பிளாஸ்டிக். கடந்த 1862-இல் லண்டன் மாநகரில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் முதல் முறையாக மனிதனால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக்கை காட்சிக்கு வைத்தார் அலெக்ஸாண்டர் பார்க்ஸ் என்பவர். அன்றுமுதல், குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள் தொடங்கி பெரிய கார் பாகங்கள் வரையில் இன்று பிளாஸ்டிக் இல்லாத பொருள்களே இல்லை என்றாகி விட்டது. விலை குறைவு, எடை குறைவு, உலோகத்துக்கு இணையான வலிமை போன்ற காரணங்களால் ஆரம்ப காலங்களில் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது இந்த பிளாஸ்டிக். இன்று புலி வாலைப் பிடித்த கதையாக மாறிவிட்டது. சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வரும் இந்த பிளாஸ்டிக் அழிய சுமார் 400 முதல் 1,000 ஆண்டுகள் வரை ஆகுமாம்.

ஆதலால்தான் எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பான, பழுதற்ற உலகை விட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்போம் என அரசும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் வீதி, வீதியாக கோஷத்துடன் வலம் வருகின்றன. என்ன பயன்? பாத்திரத்தையும், பையையும் கையில் எடுக்கத் தயக்கம்காட்டும் வரையில் பிளாஸ்டிக்குக்கு மரணமில்லை

## கனமழை: சென்னை பல்கலைக் கழகத் தேர்வுகள் ரத்து

தென் மேற்கு வங்கக் கடலில் புதியக காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது புயலாக மாறக்கூடும்.

இதன் காரணமாக, வட கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதையடுத்து சென்னையில் பெய்துவரும் கனமழை காரணமாக சென்னை பல்கலைக் கழகத்தில் இன்று(09-11-15) நடக்கவிருந்த பருவத் தேர்வுகள் ரத்து

செய்யப்படுவதாக சென்னை பல்கலை துணைவேந்தர் தாண்டவன் அறிவித்துள்ளார்.

## வட கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

தென் மேற்கு வங்கக் கடலில் புதியக காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது புயலாக மாறக்கூடும்.

இதன் காரணமாக, வட கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்தார். இந்நிலையில் சென்னை மற்றும் நாகை கடற்பகுதிகளில் புயல் கூண்டு எச்சரிக்கை ஏற்றப்பட்டுள்ளது.

தமிழக வடக்கு கடலோர பகுதிகளில் மணிக்கு 60 கி.மீட்டர் முதல் 70 கி.மீட்டர் வரை காற்று வீச்சும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் நாளை மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். நாளை, சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 63 அடியை எட்டியது பவானிசாகர் அணை

நீலகிரி பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 63 அடியை எட்டியுள்ளது.

பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதையடுத்து, அணைக்கு நீர்வரத்து 9400 கன அடியாக அதிகரித்துள்ளது. நவம்பர் 1-ஆம் தேதி 56 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து ஞாயிற்றுக்கிழமை 63 அடியை எட்டியுள்ளது. தெங்குமரஹாடா பகுதியில் கனமழை பெய்து வருவதால் மோயாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வெள்ளநீர் அணையில் கலப்பதால் அணைக்கு நீர்வரத்து மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சத்தியமங்கலம் வட்டாரத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் அணையில் இருந்து கால்வாய், பவானி ஆற்றுக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டது.

### தீபாவளி: மஞ்சள் வரத்து, விற்பனை அதிகரிப்பு

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மஞ்சள் வரத்து, விற்பனை அதிகரித்துள்ளது.

இந்தியாவில் மஞ்சளுக்குப் பெயர் பெற்றது ஈரோடு. இங்கு செயல்படும் அரசு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம், செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் வணிகர்களுக்குச் சொந்தமான ஏல மையம், ஈரோடு, கோபி கூட்டுறவு மஞ்சள் விற்பனைச் சங்கங்கள் மூலமாக ஈரோடு மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்தும் விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது.

மஞ்சள் மாதிரியின் தரத்தைப் பார்த்து விலை நிர்ணயம் செய்து ஏலம் விடப்படுகிறது. அதிக விலை கோரும் வியாபாரிகளுக்கு மஞ்சள் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் அதிகபட்சம் ரூ. 7 ஆயிரத்தை எட்டியது. அதைத்தொடர்ந்து, அவ்வப்போது விலை ஏறுவதும், குறைவதுமாகக் காணப்பட்டு, ஆண்டு இறுதியில் மஞ்சள் ரூ. 7 ஆயிரத்தை தாண்டியது.

பின்னர், படிப்படியாகக் குறைந்து ரூ. 6,500-க்கு விற்பனையானது. நடப்பாண்டில் மீண்டும் ரூ. 7,000 எட்டிய மஞ்சள் தொடர்ந்து குறைவதும், அதிகரிப்பதுமாக இருந்து வந்தது. கடந்த சில தினங்களுக்கு

முன்பு ரூ. 8 ஆயிரத்தை நெருங்கிய மஞ்சள் விலை தீபாவளி நெருங்குவதால் தொடர்ந்து விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கேற்ப, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், வெளி மார்க்கெட்டில் குவிண்டால் மஞ்சள் ரூ. 9 ஆயிரத்தை கடந்தது. இந்நிலையில், தீபாவளி பண்டிகை காரணமாக, இருப்பு மஞ்சளை விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுவதாலும், விலை அதிகரித்து இருப்பதாலும் கடந்த ஒரு வாரமாக மஞ்சள் வரத்தும், விற்பனையும் அதிகரித்துள்ளது.

கடந்த 5-ஆம் தேதி அதிகபட்சமாக ரூ. 8,999-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு குவிண்டால் விரளி மஞ்சள், நவம்பர் 6-ஆம் தேதி ரூ. 9,387-க்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது. நவம்பர் 2-ஆம் தேதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 1,407 மூட்டை மஞ்சள் வரத்தானதில் விலை உயர்வு காரணமாக 1,131 மூட்டை விற்பனையானது.

நவம்பர் 3-ஆம் தேதி 1,357 மூட்டை வரத்தானதில் 1,256 மூட்டையும், 4-ஆம் தேதி 1079 மூட்டை வரத்தானதில் அனைத்து மூட்டைகளும் விற்பனையானது. 5-ஆம் தேதி 1075 மூட்டை வரத்தானதில் 989 மூட்டையும், 6-ஆம் தேதி 745 மூட்டை வரத்தானதில் அனைத்து மூட்டைகளும் விற்பனை செய்யப்பட்டன. ஒரு வாரத்தில் மட்டும் 5 ஆயிரத்து 663 மூட்டை மஞ்சள் வரத்தானதில் 5 ஆயிரத்து 200 மூட்டை விற்பனையானது.

வெள்ளிக்கிழமை முதல் 6 நாள்கள் மஞ்சள் மண்டிகளுக்குத் தொடர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ள நிலையில் வெள்ளிக்கிழமை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விரளி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.

7,867-க்கும், அதிகபட்சம் ரூ. 9,387-க்கும், கிழங்கு மஞ்சள் குறைந்தபட்சம் ரூ. 7,767-க்கும், அதிகபட்சம் ரூ. 8,686-க்கும் விற்பானையானது.

வெளிச்சந்தையில் விரளி மஞ்சள் குறைந்தபட்சம் ரூ. 6,169-க்கும், அதிகபட்சம் ரூ. 9,256-க்கும், கிழங்கு மஞ்சள் குறைந்தபட்சம் ரூ. 5,509-க்கும், அதிகபட்சம் ரூ. 8,596-க்கும் விற்பனையானது.

**சென்னையில் தக்காளி விலை கிலோ ரூ. 45: ஒரே நாளில் 1,000 டன் விற்பனை**

தீபாவளிப் பண்டிகை, மழை உள்ளிட்ட காரணங்களால் கோயம்பேடு சந்தையில் தக்காளி கிலோ ரூ.45க்கு விற்பனையானது. அதேவேளையில் பண்டிகை காரணமாக ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 1,000 டன் தக்காளி விற்றுத் தீர்ந்தது. சென்னை கோயம்பேடு சந்தையில் பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரிக்காய் உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகளின் விலை கடந்த இரண்டு வாரங்களாக குறைந்து வருகிறது.

இந்த நிலையில் தக்காளியின் விலை ஞாயிற்றுக்கிழமை அதிகரித்து காணப்பட்டது. மொத்த விலையில் ஒரு கிலோ முதல் ரக தக்காளி ரூ.40 முதல் ரூ.45 வரையிலும் சில்லறை விலையில் ரூ.50-க்கும் விற்கப்பட்டது. இது கடந்த வாரம் கிலோ ரூ.25 முதல் ரூ.35 வரை விற்பனையானது. விலை அதிகரித்தாலும் தக்காளியின் விற்பனை சிறிதும் குறையவில்லை. மாறாக கடந்த சில நாள்களை விட ஞாயிற்றுக்கிழமை 300 டன் தக்காளி அதிகமாக விற்பனையானது. கடந்த வாரம் ரூ.40-க்கு விற்ற முருங்கைக்காய் வரத்து குறைவு காரணமாக தற்போது ரூ.65 ஆக விலை அதிகரித்துள்ளது.

இது குறித்து கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்க ஆலோசகர் செளந்தரராஜன் கூறியது:

கோயம்பேடு சந்தையில் தினமும் 500 டன் முதல் 700 டன் வரையிலான

தக்காளி விற்பனையாகிறது. இந்த நிலையில் தீபாவளியையொட்டி தக்காளியின் தேவைப்பாடு மிகவும் அதிகரித்துள்ளதால் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் மட்டும் 1,000 டன் தக்காளி விற்பனையானது. தக்காளி, அவரை, உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ் உள்பட பல்வேறு காய்கறிகளையும் சேர்த்து மொத்தம் 3,500 டன் காய்கறிகள் ஒரே நாளில் விற்றுத் தீர்ந்தன. என்றார் அவர்.

**கோயம்பேடு சந்தையில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோவில்)**

|  | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| பெரிய வெங்காயம் | ரூ.30-40 | ரூ.45 |
| தக்காளி | ரூ.40-45 | ரூ.50 |
| பீன்ஸ் | ரூ.35 | ரூ.42 |
| முருங்கைக்காய் | ரூ.60 | ரூ.75 |
| கேரட் | ரூ.25-30 | ரூ.36 |
| உருளைக்கிழங்கு | ரூ.18 | ரூ.32 |
| அவரைக்காய் | ரூ.35 | ரூ.45 |
| முள்ளங்கி | ரூ.16 | ரூ.25 |
| பாகற்காய் | ரூ.25 | ரூ.32 |
| நூல்கோல் | ரூ.18 | ரூ.30 |
| கத்தரிக்காய் | ரூ.15-25 | ரூ.30 |
| காலிஃப்ளவர் | ரூ.30 | ரூ.40 |
| பச்சைப்பட்டாணி | ரூ.180 | ரூ.195 |

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் பலத்த மழை**

காஞ்சிபுரத்தில் ஞாயிற்றுக்கிழமை பெய்த பலத்த மழை காரணமாக சாலையோரப் பள்ளங்களிலும், தாழ்வான பகுதிகளிலும் மழைநீர் தேங்கியது.

பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கடந்த இரு தினங்களாக மாவட்டம் முழுவதும் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் காஞ்சிபுரத்தில் மேட்டுத் தெரு, காந்தி சாலை, காமராஜர் தெரு, ஒலிமுகமதுபேட்டை, விளக்கடி கோயில் தெரு ஆகிய இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது.

பல்வேறு இடங்களில் முறையான வடிகால் வசதி இல்லாததால் ஆங்காங்கே மழைநீர் தேங்கி உள்ளது.

காஞ்சிபுரம் ரங்கசாமி குளத்துக்கு வரும் வடிகால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் தண்ணீர் வரவில்லை.

குளத்துக்கு வர வேண்டிய தண்ணீர் விளக்கடி கோயில் தெரு உள்பட பல்வேறு பகுதிகளில் தேங்கி நிற்கிறது. இந்நிலை தொடர்ந்தால் சுகாதாரப் பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

**செங்கல்பட்டு, மாமல்லபுரம் பகுதிகளில்...**

சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்தில் சனிக்கிழமை இரவு முதலே பெய்து வரும் பலத்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

மீனவர்கள் யாரும் மீன் பிடிக்க கடலுக்குள் செல்லவில்லை. தெருக்கள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடின. கடற்கரைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ள கடைகள் திறக்கப்பட்டிருந்தும் விற்பனை மந்தமாக இருந்தது. அதேசமயம் கடற்கரைக் கோயில், ஐந்து ரதம் ஆகிய பகுதிகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கொட்டும் மழையிலும்

குடையுடன் வந்து சிற்பங்களைக் கண்டு ரசித்தனர். பல சுற்றுலாப் பயணிகள் விடுதிகளிலேயே தங்கியிருந்தனர்.

பலத்த மழையால் மாமல்லபுரத்தில் இணையதள சேவை துண்டிக்கப்பட்டதால் அதைப் பயன்படுத்துவோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

செங்கல்பட்டு, சிங்கப்பெருமாள் கோவில், மறைமலைநகர், காட்டாங்கொளத்தூர், பொத்தேரி, கூடுவாஞ்சேரி உள்ளிட்ட பகுதிகள், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை காரணமாக ஞாயிற்றுக்கிழமை மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆடைகள், பொருள்கள் வாங்க வரும் சுற்றுப்புற கிராம மக்களின் வருகையை எதிர்பார்த்திருந்த செங்கல்பட்டு வியாபாரிகள் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர்.

### நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டப் பணிகள்: அதிகாரி ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டப் பணிகளை அத் துறை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் தண்டரைப் புதுச்சேரி நீர்வடிப் பகுதியில் ஒருங்கிணைந்து நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப் பணிகள், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து மத்திய அரசின் நிலவள மேம்பாட்டுத் துறையின் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்ட இயக்குநர் அமித்குமார் ஆய்வு செய்தார். அதில் பண்ணைக் குட்டை, குளம் தூர்வாருதல், கால்நடைக் குட்டை, மண்வரப்பு அமைத்தல், பழக்கன்று நடுதல் உள்ளிட்ட பணிகளை ஆய்வு செய்தார். மேலும் சுய உதவிக் குழுக்களுடன் கலந்துரையாடினார்.

ஆய்வின்போது நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சென்னை வேளாண்மைத் துணை இயக்குநர் செண்பகராஜ், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் காஞ்சிபுரம் அலுவலர், வேளாண்மை துணை இயக்குநர் ஜெ.நரசிம்மா ரெட்டி, தண்டரைப் புதுச்சேரி நீர்வடிப்பகுதி தலைவர், நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

**தென் மாவட்ட தொழிலாளர்கள் கவனத்துக்கு....**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தங்கி பணியாற்றி வரும் தென்மாவட்ட தொழிலாளர்கள் தாம்பரம், செங்கல்பட்டு, மேல்மருவத்தூர் வழியாக திருநெல்வேலி செல்லும் இரு சிறப்பு ரயில்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் ஊருக்குச் செல்லலாம்.

சென்னை எழும்பூரில் இருந்து திருநெல்வேலிக்கு (ரயில் எண்.06120) முன்பதிவு செய்யப்படாத சிறப்பு ரயில் நவம்பர் 7-ஆம் தேதியும், 9-ஆம் தேதியும் காலை 7 மணிக்கு இயக்கப்படுகிறது. இந்த ரயில் அதே தினத்தில் இரவு 11.15 மணிக்கு திருநெல்வேலியை சென்றடையும். அதேபோல் திருநெல்வேலியில் இருந்து சென்னை எழும்பூருக்கு (ரயில் எண் 06121) என்ற முன்பதிவு செய்யப்படாத ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயில் நவம்பர் 8-ஆம் தேதியும், நவம்பர் 11-ஆம் தேதியும் காலை 9.20-க்கு திருநெல்வேலியில் இருந்து புறப்பட்டு இரவு 11.50-க்கு சென்னை எழும்பூரை வந்தடையும்.

இந்த ரயில் தாம்பரம், செங்கல்பட்டு, மேல்மருவத்தூர் ஆகிய காஞ்சிபுரம் மாவட்டப் பகுதிகள் வழியாகச் செல்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தங்கி பல்வேறு தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, வாஞ்சி, மனியாச்சி, திருநெல்வேலி ஆகிய பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் இந்த ரயில்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர், கருவிகள் வழங்கல்**

தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத் திட்டத்தின் கீழ், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விதையிடும் கருவிகள், டிராக்டர்கள் விநியோகம் செய்யப்படுவதாக, ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 20 குதிரை சக்திக்கும் மேற்பட்ட திறன்கொண்ட டிராக்டர்களுக்கு ரூ.1.25,000 மானியம் வழங்கப்படுகிறது. டிராக்டர்கள் தேவைப்படும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களிடம் உரிய விண்ணப்பத்துடன், பயிர் சாகுபடி நிலத்துக்கான அடங்கல் சான்று, கம்ப்யூட்டர் சிட்டா நகல், குடும்ப அட்டை நகல் மற்றும் புகைப்படத்துடன் அணுக வேண்டும்.

அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட நிறுவனங்களில் விவசாயிகள் தாங்கள் விரும்பும் டிராக்டர்களை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் பதிவுசெய்து, டிராக்டர் விநியோகம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் விதையிடும் கருவிகள் வழங்கப்படுகின்றன. எனவே, விவசாயிகள் விண்ணப்பத்துடன் பயிர் சாகுபடி நிலத்துக்கான அடங்கல் சான்று, குடும்ப அட்டை நகல், கம்ப்யூட்டர் சிட்டா நகல் மற்றும் புகைப்படத்துடன் அணுக வேண்டும். விதையிடும் கருவிகளோ அல்லது டிராக்டர்களோ மானிய விலையில் பெற விரும்புவோர், அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை அணுகி விண்ணப்பங்களை வழங்கிடுமாறும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி வட்டாரத்தில் வேளாண்துறை சார்பில் மேலப்பருத்தியூர், சொட்டமுறி, இருஞ்சிறை, அன்னலட்சுமிபுரம், கே.நெடுங்குளம் ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு வெள்ளிக்கிழமை வேளாண் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

தரமான நெல்விதை உற்பத்தி, சான்று விதை உற்பத்தி, அறுவடை தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு விதைசான்று அலுவலர் வானமாமலை விளக்கினார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் முத்துவேல், மேலாளர் உதயகுமார், ஊர்காலன், சாமிக்கண்ணு, பழனிவேல் ராகவன், கணபதி ஆகியோர் செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரேமா நன்றி கூறினார்.

## மானாவாரி மேம்பாட்டு திட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம்

அரியலூர் மாவட்டம் செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தேசிய நீடித்த வேளாண்மை இயக்கம் சார்பில், மானாவாரி பகுதி மேம்பாடு திட்டம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் சனிகிழமை நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு ஒன்றிய குழுத் தலைவர் அ. செல்வராஜ் தலைமை வகித்தார். கருத்தரங்கில் அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் நா. பன்னீர்செல்வம் பேசியது:

மானாவாரி பகுதி மேம்பாடு திட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யும் 150 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் முதல் பயிராக பருத்தி சாகுபடி செய்யும் போது 5000 ரூபாய் மானியமும், இரண்டாவது பயிராக உளுந்து சாகுபடி செய்யும் போது 5000 ரூபாய் மாநியமும் வழங்கப்படும். மேலும் அவர்களில் கதறவை மாடு வாங்கும் விவசாயிகளுக்கு 17,500

ரூபாயும், வெள்ளாடு வாங்கும் விவசாயிகளுக்கு 13500 ரூபாயும் பின்னேற்பு மானியமாக வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

50 ஆயிரம் ரூபாய்க்கு குறைவான மதிப்பீட்டில் நிரந்தர மண்புழு உர உற்பத்தி அலகு அமைக்க 50 சதம் மானியமும் தொழில்நுட்ப பயிற்சியும் அளிக்கப்படும் என்றார்.

செந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு. ராஜசேகரன், வேளாண்மை அலுவலர் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்படும் முறை குறித்து பேசினர். கால்நடை மருத்துவர் பி. சசிகுமார் தரமான கால்நடைகள் தேர்ந்தெடுத்தல் மற்றும் வளர்ப்பு முறைகள் குறித்து பேசினார்.

கருத்தரங்கில் அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி தொழில்நுட்ப வல்லுநர் மார்கண்டன், துணை வேளாண்மை அலுவலர் சா. செல்வராசு, உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜா, இந்துஜா, மலர்கொடி, ஆனந்தி, தேவி ஆகியோர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ரூ. 7.80 லட்சத்தில் வேளாண் கருவிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ. 7.80 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகளை வழங்கி ஆட்சியர் மேலும் பேசியது:

வேளாண் துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில்

மாவட்டத்திலுள்ள 16 விவசாயிகளுக்கு தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் ரூ. 7.29 லட்சம் மதிப்புள்ள ரொட்டோவேட்டர் கருவிகளும், 2 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ. 51 ஆயிரம் மதிப்பில் விதை மற்றும் உரமிடும் கருவியும் என மொத்தம் ரூ. 7.80 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழகஅரசு வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுப்பொருட்கள், தென்னங்கன்றுகள் என பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதுடன், தரமான விதைகளையும் வழங்கி வருகிறது. எனவே, அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறும் விவசாயிகள் அதனை உரிய முறையில் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

இதில் வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், நோ0முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், துணை இயக்குநர் சதானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளுக்கு ரூ. 7.80 லட்சத்தில் வேளாண் கருவிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ. 7.80 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகளை வழங்கி ஆட்சியர் மேலும் பேசியது:

வேளாண் துறை சார்பில் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் மாவட்டத்திலுள்ள 16 விவசாயிகளுக்கு தேசிய உணவுப் பாதுகாப்புத்

திட்டத்தின் கீழ் மானிய விலையில் ரூ. 7.29 லட்சம் மதிப்புள்ள ரொட்டோவேட்டர் கருவிகளும், 2 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ. 51 ஆயிரம் மதிப்பில் விதை மற்றும் உரமிடும் கருவியும் என மொத்தம் ரூ. 7.80 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழகஅரசு வேளாண்துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுப்பொருட்கள், தென்னங்கன்றுகள் என பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதுடன், தரமான விதைகளையும் வழங்கி வருகிறது. எனவே, அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறும் விவசாயிகள் அதனை உரிய முறையில் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார்.

இதில் வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன், நோ்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், துணை இயக்குநர் சதானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தொடர் மழை: ஆறுகளில் அதிக நீர்வரத்து**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நீண்ட நாள்களுக்குப் பிறகு ஞாயிற்றுக்கிழமை தொடர்ந்து மழை பெய்தது. இதனால், ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் 10 நாள்களுக்கும் மேலாகப் பரவலாக விட்டுவிட்டு மழை பெய்து வந்தது. இந்த நிலையில், மாவட்டத்தில் நீண்ட நாள்களுக்குப் பிறகு சனிக்கிழமை இரவு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை பகல் முழுவதும் தொடர்ந்து மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக அய்யம்பேட்டையில் 34 மி.மீ. மழையளவு பதிவானது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

வெட்டிக்காடு, அணைக்கரை தலா 16, மஞ்சலாறு 15, கும்பகோணம், பட்டுக்கோட்டை தலா 9, பாபநாசம் 8.4, ஈச்சன்விடுதி 8.2, குருங்குளம்

7.7, வல்லம் 7.3, பேராவூரணி 7, திருவிடைமருதூர் 6.8, மதுக்கூர் 6.2, அய்யம்பேட்டை, திருவையாறு தலா 6, அதிராம்பட்டினம், நெய்வாசல் தென்பாதி தலா 3.8, தஞ்சாவூர் 3, பூதலூர் 2.6.

பகலில் மாலை 4 மணி வரை பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்):

அய்யம்பேட்டை 34, திருவிடைமருதூர் 28.1, மஞ்சலாறு, அணைக்கரை தலா 27.2, பாபநாசம் 18.8, பேராவூரணி 15, அதிராம்பட்டினம் 12.2, மதுக்கூர், பட்டுக்கோட்டை தலா 10, பூதலூர் 7, நெய்வாசல் தென்பாதி 6.4, வல்லம் 6, ஈச்சன்விடுதி 5.2, ஒரத்தநாடு 4.4, குருங்குளம் 4, கும்பகோணம் 3.2, தஞ்சாவூர், திருவையாறு தலா 3, திருக்காட்டுப்பள்ளி, வெட்டிக்காடு தலா 2.

நீர்வரத்து அதிகரிப்பு: மாவட்டத்தில் மாலை நேரத்துக்குப் பிறகும் தொடர்ந்து மழை பெய்தது. இதனால், ஆறுகள், வாய்க்கால்களில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் மட்டுமே திறந்துவிடப்படுகிறது. ஆனால், தொடர் மழை காரணமாக காவிரியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், கல்லணையிலிருந்து காவிரியில் 2,033 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 509 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 3,221 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,004 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதன் காரணமாகவும், ஆங்காங்கே பெய்த மழைநீர் சேருவதாலும் கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்களில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. கல்லணைக் கால்வாயில் செல்லும் தண்ணீர் கடைமடைப் பகுதியில் உள்ள ஏரிகளில் நிரப்ப வாய்ப்பாக அமைந்துள்ளது.

கூட்டம் குறைந்தது...: தஞ்சாவூர் உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழை பெய்தாலும், மக்கள் குடைகளைப் பிடித்துக் கொண்டு கடைவீதிகளுக்குச் சென்று புத்தாடைகள், வளையல், பாசிமணிகள் உள்ளிட்டவற்றை

வாங்கிச் சென்றனர். என்றாலும், தீபாவளிக்கு 2 நாள்களே உள்ள நிலையில், ஞாயிற்றுக்கிழமை கூட்டம் மிகுதியாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தொடர் மழை காரணமாக கூட்டம் குறைவாகவே இருந்தது என்றனர் வியாபாரிகள்.

தினகரன்

**வங்கக்கடலில் புயல் சின்னம்: இன்று மாலை கரையை கடப்பதால் தமிழகத்தில் பலத்த மழை**



சென்னை: காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரைக்கால்-சென்னை இடையே புதுச்சேரி கடல் அருகே இன்று கரையை கடக்கிறது. இதனால் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்யும். பல மாவட்டங்களில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் நல்ல மழை பெய்தது. சில மாவட்டங்களில் கனமழை பெய்தது. சென்னையை பொறுத்தவரை நேற்று தொடர்ந்து கனமழை காணப்பட்டது. பல இடங்களில் வெள்ளம், போக்குவரத்து பாதிப்பு கடுமையாக இருந்தது.

வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் அளித்த பேட்டி : வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது.

இதன் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் நல்ல மழை பெய்துள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புதுச்சேரிக்கு கிழக்கே தென்கிழக்கில் 440 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை(இன்று) காரைக்கால்-சென்னை இடையே புதுச்சேரி கடல் அருகே கரையை கடக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. வடகடலோரத்தில் ஒரு சில மாவட்டங்களில் கனமழையும் பெய்யும். கடல் சீற்றம் மேலும் 2 நாட்களுக்கு அதிகமாக இருக்கும். தரைக்காற்று பலமாக வீசும்.தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாபநாசம், மணிமுத்தாறில் தலா 10 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது. அம்பாசமுத்திரம் 9 செ.மீ, நாகப்பட்டினம், வேதாரண்யம் தலா 8 செ.மீ, மணியாச்சி 7 செ.மீ, ராமேஸ்வரம், ராமநாதபுரம், நாங்குநேரி, சேரன்மாதேவியில் தலா 6 செ.மீ, பாளையங்கோட்ை◌ட, தென்காசி, குன்னூர், காரைக்கால் தலா 5 செ.மீ, செங்குன்றம், பொன்னேரி, மகாபலிபுரம், பூந்தமல்லியில் தலா 2 செ.மீ, சென்னையில் 1 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில், பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் பிறப்பித்துள்ளனர்.

**தீபாவளி பண்டிகை எதிரொலி 10 ரூபாய்க்கு விற்ற மல்லிகை கிலோ 1,000**



மதுரை: தீபாவளி மற்றும் முகூர்த்த தினங்கள் காரணமாக மதுரையில் கிலோ 10க்கு விற்ற மல்லிகை தற்போது கிலோ 1,000ஐ எட்டியுள்ளது. கனகாம்பரம் கிலோ 1,500க்கு விற்பனையானது. மதுரையில் உள்ள மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டுக்கு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பூ விற்பனைக்கு வருகிறது. கடந்த சில தினங்களாக பெய்த மழையால், மல்லிகை மட்டுமின்றி அனைத்து வகையான பூக்களின் வரத்தும் குறைந்தது. அதோடு, நேற்று திருமண முகூர்த்தம் என்பதாலும், நாளை தீபாவளி பண்டிகை என்பதாலும் பூக்களின் விலை பல மடங்கு உயர்ந்தது.

இரண்டு வாரங்களுக்கு முன், கிலோ 10க்கு விற்பனையான மல்லிகைப் பூ நேற்று ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

கடந்த 2 நாட்களுக்கு முன் கிலோ 150க்கு விற்பனையான கனகாம்பரம் 1500க்கு விற்பனையானது. இதேபோல முல்லை, பிச்சி உள்ளிட்ட மற்ற பூக்களின் விலையும் உயர்ந்துள்ளது. பூ வியாபாரிகள் கூறுகையில் 'மழையால் செடியிலேயே பூ உதிர்ந்து விடுகிறது. குறிப்பாக,

கனகாம்பரம் அதிகளவில் உதிர்ந்து, மார்க்கெட்டிற்கு வரத்து குறைவாக உள்ளது. தொடர் விசேஷங்களினால் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. வரத்து குறைந்து தேவை அதிகரித்திருப்பதால், விலை பல மடங்கு உயர்ந்துள்ளது’ என்றனர். பூ மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ கணக்கில்) மல்லிகை 1000, கனகாம்பரம் 1500, முல்லை 1200, செவ்வந்தி 100 முதல் 150, பிச்சி 600, வெள்ளை பிச்சி 800.

**முட்டை விலை 354 காசாக உயர்வு**




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் உயர்ந்து 354 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்தது. இதில் முட்டை விலையில் 6 காசுகள் உயர்த்தி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 354 காசுகளாக நிர்ணயம் செய்துள்ளது. அனைத்து மண்டலங்களிலும் முட்டை விலை உயர்ந்து வருகிறது.

தமிழகத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி, முட்டையின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் முட்டை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் பகுதியில் உள்ள கடைகளில் ஒரு முட்டை 390 காசுக்கு விற்பனை

செய்யப்படுகிறது. ஒரு கிலோ முட்டைக்கோழி 54, கறிக்கோழி 63 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மண்டல முட்டை விலை விபரம் (காசுகளில்) ஐதராபாத்- 350, விஜயவாடா- 349, மும்பை- 390, மைசூர்- 366, பெங்களூரு- 365, கொல்கத்தா- 395, டெல்லி- 380 காசுகள்.

**தீபாவளியை சமாளிக்க கைகொடுக்கும் தான்சானிய பருப்பு**




சென்னை: தீபாவளி பண்டிகை நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ளது. இந்த நேரத்தில் பருப்பு விலை குறைய தொடங்கியுள்ளது. பிரியாணி செய்ய பயன்படும் பாசுமதி அரிசியும் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. தமிழகத்தில் கடந்த மாதம் வரலாறு காணாத வகையில் பருப்பு விலை உயர்ந்தது. அதன் பின்னர் தற்போது பருப்பு விலை குறைய தொடங்கியுள்ளது. அதாவது, கடந்த வாரம் 190க்கு விற்ற துவரம் பருப்பு(பாக்கெட்) 180 ஆகவும், துவரம் பருப்பு(சில்லரை விலை) 180லிருந்து 170 ஆகவும் விலை குறைந்துள்ளது. இதேபோல தான்சானியா, கென்யா, மாளவியா போன்ற ஆப்ரிக்க நாடுகளில் இருந்து அளவுக்கு அதிகமாக தான்சானியா பருப்பு கப்பலில் வந்து கொண்டிருக்கிறது. இதனால், தான்சானியா துவரம் பருப்பு 140லிருந்து 130, தான்சானியா துவரம் பருப்பு(2ம் ரகம்) 120லிருந்து 110 ஆகவும் குறைந்துள்ளது. மேலும், உளுந்தம் பருப்பு 170, பர்மா உளுந்தம் பருப்பு

150 என்று அதே விலையில் விற்கப்படுகிறது.தீபாவளி பண்டிகையின் போது ஒவ்வொரு வீடுகளில் வடை, முறுக்கு, அதிரசம், அச்சுமுறுக்கு உள்ளிட்ட பலகாரங்கள் செய்வது வழக்கம். இதற்கு சமையல் எண்ணெய் அதிகம் பயன்படுத்துவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு சமையல் எண்ணெய் விலை சற்றே அதிகரித்துள்ளது. அதாவது கடந்த ஆண்டு பாமாயில் 48க்கு விற்றது, தற்போது 52க்கும், சன்பிளவர் ஆயில் 80லிருந்து 87க்கும், சன்பிளவர் ஆயில் 72லிருந்து 77க்கும், கடலை எண்ணெய் 60லிருந்து 80 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. அக்மார்க் நல்ெலண்ணெய் 230லிருந்து 180, ஈரோடு, காங்கேயம், திருப்பத்தூர் அக்மார்க் நல்ெலண்ணெய் 190லிருந்து 150, விளக்கேற்றும் நல்லெண்ணெய் 100லிருந்து 70 ஆகவும் விலை குறைந்துள்ளது. பிரியாணி செய்ய பயன்படும் பாசுமதி அரிசி(முதல் ரகம்) 130லிருந்து 90, பாசுமதி அரிசி(2ம் ரகம்) 100லிருந்து 60, பாசுமதி அரிசி(3ம் ரகம்) 70லிருந்து 40, பாசுமதி அரிசி(பாக்கெட்) 100லிருந்து □60 ஆகவும் விலை குறைந்துள்ளது. அதிரசம் செய்ய பயன்படும் மாவு பச்சரிசி 36லிருந்து 28, இட்லி அரிசி 34லிருந்து 28 ஆகவும் விலை குறைந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியுள்ளார்.இதுகுறித்து மேலும் அவர் கூறுகையில், ‘‘தீபாவளி நேரத்தில் பருப்பு விலை குறைய ெதாடங்கியுள்ளது. குஜராத், மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா போன்ற வெளிமாநிலங்களில் வருகிற டிசம்பர், ஜனவரி மாதத்தில் பயிறு அறுவடை தொடங்கும். இந்த நேரத்தில் தமிழகத்திற்கு அதிமான அளவில் பருப்பு வர தொடங்கும். இதனால், துவரம் பருப்பு கிலோவுக்கு 50 வரை குறைய வாய்ப்புள்ளது. தான்சானியா துவரம் பருப்பு தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளதால் வரும் காலங்களில் தான்சானியா துவரம் பருப்பு கிலோவுக்கு 30 முதல் 40 வரை குறைய வாய்ப்புள்ளது’’ என்றார். தீபாவளி நேரத்தில் பருப்பு மற்றும் பிரியாணி அரிசி குறைந்துள்ளது

நடுத்தர மக்களுக்கு சற்று நிம்மதியை ஆழ்த்தியுள்ளது.திடீர் கடைகளால் வியாபாரம் பாதிப்பு

தீபாவளி நேரத்தில் சென்னை உட்பட தமிழகம் முழுவதும் புற்றீசல் போல திடீர் கடைகள் முளைத்துள்ளன. அதாவது தீபாவளி ஆபர் என்ற பெயரில் 1,669க்கு 25 கிலோ அரிசி, 1 கேமரா செல்போன் அல்லது 5 லிட்டர் குக்கர், 25 லிட்டர் அரிசி டிரம், அன்னகூடை(டப்பு), பெரிய குப்பை கூடு, 1 கிலோ கோதுமை மாவு, 1 கிலோ உப்பு, 1 கிலோ சர்க்கரை உள்ளிட்ட 10 பொருட்களை வழங்கி வருகின்றனர். இப்படி திடீர் கடைகள் முளைக்க அனுமதி வழங்கியது யார் என்று தெரியவில்லை. திடீர் கடைகளால் ஏற்கனவே கடைகளை நடத்தி வருவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சொரூபன் கூறியுள்ளார்.

தினமணி

**புதிய காற்றழுத்த தாழ்வு நிலை: தமிழகத்தில் 5 நாட்களுக்கு மழை நீடிக்கும் வானிலை ஆய்வு மையம் தகவல்**

சென்னை: வங்கக் கடலில் நிலவி வந்த மேலடுக்கு சூழற்சி காரணமாக ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இதனால், தமிழகத்தில் மேலும் 5 நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த மாதம் 28-ம் தேதி வடகிழக்கு பருவ மழை தொடங்கியது. அன்று முதல் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

மேலும், வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேல் அடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருந்தது. இந்நிலையில், சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் நேற்று செய்தியாளர்களிடம்

கூறியதாவது: வங்கக் கடலில் நிலவி வந்த மேலடுக்கு சூழற்சி காரணமாக இன்று காலை ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. அது தென் மேற்கு வங்கக் கடல் மற்றும் அதை ஒட்டிய தென் கிழக்கு பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்து வருகிறது.

வரும் 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் பலத்த மழை பெய்யும். உள் மாவட்டங்களிலும் அதிக இடங்களில் மழையை எதிர்பார்க்கலாம். கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த மழை அல்லது மிக பலத்த மழை பெய்யும். இந்தக் காற்றழுத்த தாழ்வுப் பகுதி வரும் 48 மணி நேரத்தில் தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாற வாய்ப்புள்ளது. அது புயல் சின்னம் ஆகவும் மாற வாய்ப்பு உள்ளது. எனவே மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்.

புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஞாயிற்றுக்கிழமை முதல் தமிழகம் முழுவதும் தீவிரமாக மழை பெய்யத் தொடங்கும். இந்த மழை 5 நாட்கள் நீடிக்க வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அவ்வப்போது பலத்த மழையை எதிர்பார்க்கலாம். இதனிடையே, அரபிக்கடலில் உருவாகி இருந்த மேக் புயல் இன்று காலை சுமத்ரா தீவுக்கு 670 கி. மீட்டர் கிழக்கு, வடகிழக்கு திசையில் உள்ளது. அது மேற்கு நோக்கி நகர்ந்து செல்கிறது. இவ்வாறு ரமணன் கூறினார்.

இதற்கிடையே, தமிழகத்தில் மிக அதிகபட்சமாக நாகப்பட்டிணத்தில் 19 செ.மீட்டரும், சீர்காழியில் 13 செ.மீட்டரும், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டத்தில் தலா 9 செ.மீட்டரும், அணைக்காரன்சத்திரத்தில் 8 செ.மீட்டரும், சிதம்பரம், திருவாரூர், நாங்குநேரியில் 7 செ.மீட்டரும், சாத்தான்குளம், மயிலாடுதுரை, பாளையம்கோட்டை, மகாபலிபுரம், திருத்துரைப்பூண்டியில் தலா 6 செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

முகம் நூறு: எல்லாமே இருக்கு நம் விவசாயத்தில்!_



பூட்டன், பாட்டன், தந்தை இவர்கள் அனைவரும் பரம்பரையாகச் செய்துவந்த விவசாயத்தை நாம் ஏன் புறக்கணித்தோம் என்ற கேள்வி திவ்யாவை வேறொரு தளத்துக்கு அழைத்துச் சென்றிருக்கிறது. எம்.பி.ஏ., முடித்துவிட்டு மாதம் கிட்டத்தட்ட எண்பதாயிரம் ரூபாய் சம்பாதித்த திவ்யாவை விவசாயத்தை நோக்கித் திருப்பியது எது?

திவ்யாவின் சொந்த ஊர், சென்னிமலையை அடுத்த கவுண்டன்பாளையம். அப்பா வாசுதேவனுக்கு விவசாயமும் வியாபாராமும் தொழில். அம்மா சுசீலா, இல்லத்தரசி. கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு ஆறரை ஆண்டுகள் தனியார் நிறுவனங்களில் பணியாற்றினார் திவ்யா. கைநிறைய சம்பளம் கிடைத்தாலும் ஏதோ ஒரு போதாமை உணர்வு அவரது மனதுக்குள் நெருடிக்கொண்டே இருந்தது.

“அப்பாவுக்கு வியாபாரத்துல ஆயிரம்தான் வருமானம் வந்தாலும் எங்க தென்னந்தோப்புல இருந்து கிடைச்ச வருமானத்தைதான் என் படிப்பு செலவுக்குக் கொடுப்பார். ஒரு நாள் அதைப் பத்தி யோசிச்சப்பதான்

விவசாய வருமானம் எவ்வளவு தனித்துவமானதுன்னு புரிஞ்சுக்கிட்டேன். நாமளும் விவசாயத் துறையில ஏதாவது செய்யணும்னு தோணுச்சு. நாலு மாசம் ஒரு பயோ டெக் கம்பெனியில வேலை பார்த்திருந்ததால, விவசாயத்தைப் பத்தியும் விவசாயிகளோட நிலை பத்தியும் என்னால ஓரளவுக்குப் புரிஞ்சுக்க முடிஞ்சது" என்று சொல்லும் திவ்யா, தான் பார்த்துவந்த வேலையைத் துறந்தார். கோயம்புத்தூரில் விவசாய ஆலோசனை மையம் தொடங்கும் திவ்யாவின் முடிவுக்கு வீட்டில் பலத்த எதிர்ப்பு.

"என்னோட இந்த முடிவை எல்லாருமே எதிர்த்தாங்க. 'ஏ.சி. ரூம்ல உட்கார்ந்து வேலை பார்த்த நீ, சேத்துல இறங்கி வேலை செய்வியா?'ன்னு என் கணவரே கேட்டார்" - சொல்லும்போதே சிரிப்பு பொங்குகிறது திவ்யாவுக்கு. வீட்டில் இருக்கும் ஒவ்வொருவரையும் சமாதானப்படுத்திவிட்டுத் தன் வேலைக்கான அடுத்த கட்டப் பணியில் இறங்கினார்.

**விவசாயம் ஏன் மங்கியது?**

"நம் அடிப்படைத் தேவையான உணவைத் தருவது விவசாயம்தான். ஆனால், நம் நாட்டில் விவசாயிகளின் நிலை என்ன? ஒரு காலத்தில் ஒட்டுமொத்த சமூகமும் விவசாயத்தைத் தொழிலாகச் செய்துகொண்டிருந்த நிலை மாறி, இன்று ஏன் அனைவரும் விவசாயத்தை விட்டு வெளியேறுகின்றனர்? விவசாயிகள் கொத்துக் கொத்தாகத் தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோவது எதனால்? உற்பத்தி குறைவதும், விவசாயப் பொருட்களின் விலை சரிவதும் என்ன கணக்கு? இப்படி என் மனசுக்குள்ளே ஆயிரம் கேள்விகள். இதற்கெல்லாம் விடை தேடிப் புறப்பட்டேன்" என்று சொல்லும் திவ்யா, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்தார். ஒவ்வொரு கிராமமாகச் சென்று விவசாயிகளைச் சந்தித்தார்.

"நம் பாரம்பரிய விவசாய முறையை மறந்ததும், ரசாயன உரங்களால் மண்ணின் வளம் மங்கியதும்தான் விவசாயத்தின் சரிவுக்கான முக்கிய

காரணங்கள். பருவ மழை பொய்த்துப்போவது, விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காதது, கிடைத்தாலும் அவர்களுக்குப் போதிய கூலி தர முடியாதது என்று ஏகப்பட்ட சிக்கல்கள். இதற்கெல்லாம் தீர்வு சொல்கிற மாதிரி ஒரு அமைப்பு இருக்க வேண்டும் என்பதற்காக, 'அக்ரோ க்ரீன் பயோலைஃப்' என்ற விவசாய ஆலோசனை மையத்தைத் தொடங்கினேன். முன்னோடி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதுதான் எங்கள் நோக்கம். முழுப் பயிர் பராமரிப்புத் திட்டம் அதில் ஒன்று" என்று சொல்கிறார் திவ்யா.

**பெண்களால் இயங்கும் மையம்**

இந்தியா முழுவதும் உள்ள தொழில்நுட்ப நிபுணர்கள் இந்த ஆலோசனை மையத்தின் ஆலோசகர்களாக இருக்கிறார்கள். பல மாநிலங்களில் இருக்கும் இயற்கை வேளாண் இடுபொருள் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறார் திவ்யா. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் ஆறு மாதங்கள் பயிற்சி எடுத்துக்கொண்டது திவ்யாவின் வேளாண் அறிவை விசாலமாக்கியது. விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கவும், அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கவும் இங்கே விவசாய மருத்துவர்கள் இருக்கிறார்கள். முழுக்க முழுக்கப் பெண் ஊழியர்களைக் கொண்டு செயல்படுவது இந்த மையத்தின் இன்னொரு சிறப்பம்சம்!

"ஆரம்பத்தில் விவசாயிகள் அத்தனை சீக்கிரம் என்னை ஏற்றுக்கொள்ள வில்லை. 'இந்த சின்னப் பொண்ணுக்கு விவசாயத்தைப் பத்தி என்ன தெரியும்? ஏதோ தலைவரு கூப்பிட்டாரேன்னு வந்திருக்கோம்'னு பேசிக்கொண்டது எனக்கும் கேட்டது. இதற்காகவெல்லாம் பின்வாங்கிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். நான் சொல்ல வேண்டியதை அவர்களுக்குப் பொறுமையாக விளக்கினேன். முதலில் சோதனை முயற்சியாக 100 தென்னை மரங்களையும் ஒரு ஏக்கர் நிலத்தையும் எடுத்துக்கொண்டேன். அவற்றின் மகசூலைப் பார்த்த விவசாயி, அடுத்த முறை ஐநூறு தென்னை மரங்களுக்கு என்னிடம்

இடுபொருட்கள் வாங்கினார். தென்னையின் வளர்ச்சியைப் பார்த்த விவசாயிகள், ‘வாழைக்கும் இது பொருந்துமா?’ என்று என்னிடம் கேட்டார்கள். இதுதான் என் வெற்றி!” என்று பூரிக்கிறார் திவ்யா. வாழை, தக்காளி, மஞ்சள், கரும்பு, நெல் என்று அடுத்தடுத்து தன் எல்லைகளை விரிவுபடுத்திக்கொண்டது இவரது ஆலோசனை மையம்.

இது முன்னோடி விவசாயிகளுக்கான மையம் என்பதால், பெரிய அளவில் விவசாயம் செய்கிறவர்களும் போன் மூலம் தகவல் பெறுவோரும் பயனாளிகளாக இருக்கிறார்கள். தமிழகம் முழுக்க கிட்டத்தட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அடிப்படை உறுப்பினர்களோடு செயல்படுகிறது இந்த மையம்.

“கூலித் தொழிலாளி களுக்குக்கூட ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டுவிட முடியும். ஆனால் விவசாயிகளுக்கு அப்படியொரு வருமானத்தை அறுதியிட்டுச் சொல்ல முடியுமா? அவர்களும் மாத வருமானம் பெற்றால் எப்படியிருக்கும்? அந்த எண்ணத்தில் உதித்ததுதான் ‘பப்பாளி சாகுபடி திட்டம்’. இதில் ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு மாதம் பதினைந்தாயிரம் ரூபாய் தருகிறோம். 14 ஏக்கரில் ஆரம்பித்த இந்தத் திட்டம் இப்போது 50 ஏக்கராக உயர்ந்திருப்பது, விவசாயிகளிடம் அதற்கு இருக்கும் வரவேற்பையே காட்டுகிறது” என்று தன் புதிய திட்டத்தைப் பற்றிச் சொல்கிறார் திவ்யா.

**இல்லத்தரசிகளுக்கும் வருமானம்**

விவசாய நிலம் இல்லாதவர்களின் வீட்டைச் சுற்றியும் மாடியிலும் தோட்டம் அமைக்கவும் இவர்கள் உதவுகிறார்கள். மண்ணில்லா விவசாயத்துக்குக் கைகொடுக்கும் தென்னை நார் கழிவு, பலவிதமான இயற்கை உரங்கள், விதைகளையும் விற்பனை செய்கின்றனர். தென்னை நார் கழிவிலிருந்து பல்வேறு அளவிலும் வடிவிலும் செய்யப்படுகிற செங்கல் போன்ற கட்டிகள் 100 ரூபாயிலிருந்து கிடைக்கின்றன. அவற்றில் தண்ணீர் ஊற்றினால் உப்பிப் பெருத்துவிடும். அதில் விதையைத் தூவி, மண் புழு உரத்தை இட்டால் போதும். இந்தத்

தென்னை நார் கழிவு, ஈரத்தைக் கசியவிடாது என்பதால் மாடி பாழாகுமே என்ற கவலையும் இல்லை.

“பூச்சிவிரட்டிகள்கூட இயற்கைப் பொருட்களைக் கொண்டுதான் தயாரிக்கிறோம். நம் பாரம்பரிய கீரை வகைகளான காசினி கீரை, சர்க்கரவர்த்தினி கீரை போன்றவற்றுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு. தக்காளி, வெண்டை, வெங்காயம், முருங்கை, பாகல், புடலை, கொத்தவரை, மிளகாய், முள்ளங்கி, பீட்ரூட், கோஸ், கறிவேப்பிலை, கொத்தமல்லி என்று அன்றாடச் சமையலுக்குத் தேவையான காய்கறிகளை வீட்டிலேயே வளர்க்கலாம். இப்போது இயற்கை முறையில் விளைந்த காய்கறிகளுக்கு அமோக வரவேற்பு என்பதால் சிலர் அதிக அளவில் காய்கறிகளை உற்பத்தி செய்து, தங்கள் வருமானத்தைப் பெருக்குகின்றனர்” என்கிறார் திவ்யா.

## பறவைகள் தின்றது போக மீதி கிடைத்தால் போதும்





இன்றைக்குப் பலரும் சிறுதானியங் களையும், நம்முடைய பாரம்பரிய உணவையும் தேடிச் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அவற்றை விளைவிக்கும் ஆர்வமும் பலரிடையே அதிகரித்திருக்கிறது. இந்த வரிசையில் தமிழ்த் தொலைக்காட்சிகளில் முதல் திருநங்கை நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்னும் பெருமையைப் பெற்ற ரோஸும் இணைகிறார். திருவள்ளூர் அருகே இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார் ரோஸ். தன் அனுபவம் குறித்து அவர் பகிர்ந்து கொண்டதிலிருந்து…

**இயற்கை வேளாண்மையில் உங்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது எப்படி?**

ஆன்மிகத்திலும் இயற்கையை ரசிப்பதிலும் இயல்பாகவே எனக்கு ஈடுபாடு உண்டு. ஓஷோவின் புத்தகங்களை அதிகம் படிப்பது வழக்கம். ஓஷோவின் கருத்துகளை விவரிக்கும் ஒரு வழிகாட்டி மூலம் இயற்கைவழி விவசாயம் குறித்துத் தெரிந்துகொண்டேன். அது தொடர்பான விவரங்களைத் தேட ஆரம்பித்து நம்மாழ்வாரின் வானகம் அமைப்பால் ஈர்க்கப்பட்டேன். அங்குப் பயிற்சி எடுத்துக்கொண்டேன். இயற்கை விவசாயத்தில் எனக்குக் உதவ நிறைய நண்பர்களும் முன்வந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தை எனக்கு கற்றுக்கொடுத்துள்ளனர்.

**உங்கள் பண்ணையில் என்ன பயிரிட்டிருக்கிறீர்கள்?**

மாப்பிள்ளை சம்பா, சீரகச் சம்பா அரிசி வகைகள், சில காய்கறி, மூலிகைகள் மற்றும் வாழை பயிரிட்டுள்ளேன்.

**பூச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துகிறீர்கள்?**

பூச்சிவிரட்டிகள் செய்யப் பயிற்சி பெற்றுள்ளேன். நொச்சி, வேம்பு, புகையிலை மற்றும் பலவிதமான இலை தழைகளைச் சேர்த்து இதைச் செய்யலாம். பூச்சிகள், பறவைகளை ஈர்க்கும். என் பண்ணையில் பறவைகள் வந்து உட்கார்வதற்கு ஏற்பக் கொட்டகை மற்றும் கம்புகளால் ஆன வேலியும் போட்டுள்ளேன். பறவைகள் அதிகம் வருவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அவை பூச்சிகளை உண்ணும். அது மட்டுமல்லாமல் பூச்சிகளும் பறவைகளும் தின்று முடித்த பிறகு இருக்கும் மீதி விளைச்சல் எனக்குக் கிடைத்தாலேபோதும்.

**விளையும் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வழிகளைப் பற்றி யோசித்திருக்கிறீர்களா?**

முகநூல் வழியில் ‘நான்கு தூண் இயற்கை பண்ணை' என்பது என்னுடைய பண்ணைக்கான பக்கம் மற்றும் http://roseorganics.in என்ற இணையதளத்தையும் தொடங்கயுள்ளேன். இவற்றில் பலரும் இணைந்துள்ளனர். வாட்ஸ்-அப் குழுவும் உள்ளது. அத்துடன் எனக்குத்

தெரிந்த நண்பர்களுடைய இயற்கைவழி கடைகளும் உள்ளன. இவ்வழிகள் மூலம் சாகுபடியைச் சந்தைப்படுத்த முயல்கிறேன். அதிகமாக இணையத் தள வழிகளைக் கையாள்கிறேன்.

**இந்தப் பணியில் உங்களுக்கு உதவுபவர்கள் யார்?**

முக்கியமாகப் பரதநாட்டியக் கலைஞர் லக்ஷயா என்னும் திருநங்கை இயற்கை விவசாயத்தில் எனக்கு உதவுகிறார். வேறு பல நண்பர்களும் உதவுகின்றனர்.

விகடன்

**தத்தளிக்கும் சென்னை: உதவி எண்களை அறிவித்தது மாநகராட்சி!**



தமிழகம் முழுவதும் பரவலாக கனமழை பெய்து வருகிறது. அதன் காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு துறைமுகங்களில் மூன்றாம் எண் புயல்

எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று காலை தொடங்கிய மழை, விடிய விடிய கொட்டி தீர்த்ததுடன் இன்றும் தொடர்கிறது. இதனால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. பல பகுதிகளில் சாலைகளில் மழைநீர் குளம்போல் தேங்கியுள்ளதால், மக்கள் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர். தாம்பரம், ஆவடி, அம்பத்தூர், பூவிருந்தவல்லி, மதுரவாயல், திருநின்றவூர் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் சூழ்ந்துள்ளது.

தொடர் மழை காரணமாக ஆங்காங்கே சாலை ஓரம் இருந்த மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. இதனால் பல பகுதிகளில் போக்குவரது பாதிக்கப்பட்டு உள்ளது. சென்னையை அடுத்த ஏகாட்டூரில் அடுக்குமாடி கட்டடத்தின் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் 2 பேர் உயிரிழந்தனர். அரியலூர் மாவட்டம் நந்தியான்குடிகாடு கிராமத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். தொடர் மழை காரணமாக சென்னைக்கு குடிநீர் ஆதாரமாக திகழும் புழல், பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகள் நிரம்பி வருகின்றன.

இந்நிலையில், வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் இயற்கை பேரிடர் பாதிப்பு உதவிக்கு 1077 என்ற எண்ணிலும், மின்ஒயர் அறுந்தால் 1913 என்ற எண்ணிலும், குடிநீர் வாரியத்தில் புகார் தெரிவிக்க 044-45674567 என்ற எண்ணிலும் தெரிவிக்கலாம் என்று மாநகராட்சி சார்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. உதவி பெறுவதற்கு 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது.

பாதாள சாக்கடையில் ஏற்படும் அடைப்புகளை உடனே சீரமைக்கவும் மாநகராட்சி நடவடிக்கை எடுத்து உள்ளது. சென்னையில் மழையால் பாதிக்கப்படுவோரைத் தங்க வைக்கத் தற்காலிக மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அதன்படி, கிண்டி காந்தி மண்டபம் உள்பட 5

இடங்கள் மற்றும் ஒவ்வொரு வார்டிலும் சமுதாயக் கூடங்கள் உள்ளிட்ட இடங்களையும் சென்னை மாநகராட்சி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதனிடையே, சென்னை கோட்டூர்புரத்தில் சாலையில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியை அமைச்சர்கள் வளர்மதி, வேலுமணி, மேயர் துரைசாமி ஆகியோர் ஆய்வு செய்தனர். மேலும், 24 மணி நேர அடிப்படையில் மழைநீரை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

**கனமழை: பல மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு லீவு விட்டாச்சு!**



**சென்னை:** தொடர் மழை காரணமாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட பல மாவட்டங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளுக்கு இன்று (நவ. 9) விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் வட கிழக்குப் பருவ மழை தொடங்கியுள்ள நிலையில், கடந்த சில நாட்களாகவே ஆங்காங்கே பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில், வங்கக் கடலில் புதிதாக உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் தமிழகம் முழுவதும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை முதல் தொடர் மழை பெய்து வருகிறது.


இந்த கன மழை காரணமாக, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், புதுவையிலும் இன்று (திங்கட்கிழமை) பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும், நேற்று முதல் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் சாலைகளில் ஆங்காங்கே மரங்கள் விழுந்தும், மழை நீர் தேங்கி உள்ளதாலும் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், விடிய விடிய கன மழை பெய்து வருவதால், சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதுபோல் திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, திருவாரூர், அரியலூர், தஞ்சாவூர் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் பள்ளி, கல்லூரிகளுக்கும் விடுமுறை அளித்து அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவிட்டுள்ளனர். இதேபோல், புதுவை, காரைக்காலில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெற இருந்த பருவத் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக துணை வேந்தர் தாண்டவன் அறிவித்துள்ளார். உறுப்பு கல்லூரிகளிலும் தேர்வுகளை ரத்து செய்து உத்தரவிட்டுள்ள அவர், பருவத் தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், சட்டப்பல்கலைக் கழக தேர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

**வட கடலோர மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை வங்கக்கடலில் புயல் சின்னம் காரைக்கால்-சென்னை இடையே இன்று கரையை கடக்கும்**



சென்னை,

வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று புயல் சின்னமாக மாறி உள்ளது. இந்த புயல் சின்னம் காரைக்கால்-சென்னை இடையே இன்று கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் வட கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் இன்று கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

வடகிழக்கு பருவமழை

வடகிழக்கு பருவமழை கடந்த 28-ந் தேதி முதல் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு தென்மேற்கு வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும், உள்மாவட்டங்களிலும் மழை பெய்து வருகிறது.நேற்று முன்தினம் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நல்ல மழை பெய்தது. அதிகபட்சமாக நேற்று முன்தினம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 19 செ.மீ. மழைப்பொழிவு பதிவானது.

இந்த நிலையில், வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று தாழ்வு மண்டலமாக மாறி உள்ளதாகவும், இதனால், வட கடலோர மாவட்டங்கள் மற்றும் எஞ்சிய மாவட்டங்களில் சில இடங்களில் இன்று(திங்கட்கிழமை) கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் சின்னம்

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

வங்கக்கடலில் நேற்று (நேற்று முன்தினம்) நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று புயல் சின்னமாக மாறி உள்ளது. இதன் காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது.

இந்த புயல் சின்னம் புதுச்சேரிக்கு கிழக்கு, தென் கிழக்கே 440 கிலோ மீட்டர் தொலைவில் நிலைக்கொண்டுள்ளது. இது நாளை (இன்று) இரவு காரைக்கால்-சென்னை இடையே புதுச்சேரி கடற்கரை அருகே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கனமழை

இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று) கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள்மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்யும். வட கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்யக்கூடும். எஞ்சிய மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்பும் இருக்கிறது. கடல் சீற்றம் அதிகமாக இருப்பதால், மேலும் 2 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம். வட கடலோர மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள ராமநாதபுரம் கடற்கரைகளில் 40 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

தரைக்காற்று பலமாக வீசும்

சென்னையை பொறுத்தவரையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். விட்டு விட்டு மழை பெய்யும். சில இடங்களில் கனமழை பெய்யும். தரைக்காற்று பலமாக இருக்கும். வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகம் 44 செ.மீ. மழைப்பொழிவை பெறும். கடந்த ஆண்டு இந்த பருவமழை காலத்தில் 2 சதவீதம் குறைவான மழை அளவை பெற்றிருந்தது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடங்கி 13 நாட்கள் ஆகியுள்ள நிலையில் இதுவரை தமிழகம் 22 செ.மீ. மழை அளவை பெற்றுள்ளது.அரபிக்கடல் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு உருவான 'மேக்' புயல், சொக்கோத்ரா தீவுக்கு கிழக்கே 240 கிலோ மீட்டர் தொலைவில் நிலைக்கொண்டுள்ளது. இந்த புயல் மேற்கு நோக்கி

நகர்ந்து ஏடன் வளைகுடா வழியாக சென்று, ஏமன் கடற்கரை அருகே வருகிற 10-ந் தேதி (நாளை) மாலை கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

புயல் எச்சரிக்கை கூண்டு

வங்ககடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று தாழ்வு மண்டலமாக மாறியதால் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக்கூடாது என்று மீனவர்களை எச்சரிக்கை செய்யும் வகையில் சென்னை துறைமுகத்தில் 1-வது எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு உள்ளது. தொடர்ந்து துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கும் இதுகுறித்து தகவல்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன. அதிகாரிகள் தொடர்ந்து நிலைமையை கண்காணித்து வருகின்றனர்.கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டதால் பாம்பனில் 1-வது எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மழை அளவு

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-பாபநாசம், மணிமுத்தாறு ஆகிய இடங்களில் தலா 10 செ.மீ., அம்பாசமுத்திரம் 9 செ.மீ., நாகப்பட்டினம், வேதாரண்யம் ஆகிய இடங்களில் தலா 8 செ.மீ., கீழ் கோதையாறு, மணியாச்சி ஆகிய இடங்களில் தலா 7 செ.மீ., ராமேசுவரம், ராதாபுரம், நாங்குநேரி, சேரன்மகாதேவி 6 செ.மீ., பாளையங்கோட்டை, ராமநாதபுரம், தென்காசி, குன்னூர், காரைக்கால் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீ., சென்னை மீனம்பாக்கம், ராமநாதபுரம், ஆயிக்குடி, சென்னை அண்ணா பல்கலைக்கழகம், தூத்துக்குடி துறைமுகம், செம்பரம்பாக்கம், திருச்செந்தூர், மாதவரம், ஸ்ரீவைகுண்டம், கோத்தகிரி ஆகிய இடங்களில் தலா 4 செ.மீ. மழை பெய்துள்ளது.

## மழையால் ஏற்படும் இயற்கை பேரிடர் பாதிப்பு உதவிக்கு உதவிஎண் அறிவிப்பு



சென்னை,

வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் இயற்கை பேரிடர் பாதிப்பு உதவிக்கு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டு உள்ளது.

சென்னையில் நேற்று காலையில் இருந்தே கனமழை பெய்து வருகிறது. பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. உதவிக்கு 1077 என்ற எண்ணிலும், மின்வயர் அறுந்தால் 1913 என்ற எண்ணிலும் புகார் தெரிவிக்கலாம். குடிநீர் வாரியத்தில் புகார் தெரிவிக்க 044-45674567 என்று எண்ணிலும் தெரிவிக்கலாம் என்று மாநகராட்சி தரப்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. உதவி பெறுவதற்கு 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது.

பாதாள சாக்கடையில் ஏற்படும் அடைப்புகளை உடனே சீரமைக்கவும் மாநகராட்சி நடவடிக்கை எடுத்து உள்ளது.

சென்னையில் மழையால் பாதிக்கப்படுவோரைத் தங்க வைக்கத் தற்காலிக மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. கிண்டி காந்தி மண்டபம் உள்பட 5 இடங்களில் சென்னை மாநகராட்சி நிர்வாகம் ஏற்பாடு செய்து உள்ளது. ஒவ்வொரு வார்டிலும் சமுதாயக் கூடங்கள் உள்ளிட்ட இடங்களையும் மாநகராட்சி ஏற்பாடு செய்து உள்ளது.

அமைச்சர் வேலுமணி பேட்டி

சென்னை கோட்டூர்புரத்தில் சாலையில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியானது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மழைநீரை அகற்றும் பணியை அமைச்சர்கள் வளர்மதி, வேலுமணி, மேயர் துரைசாமி ஆகியோர் ஆய்வு செய்தனர்.

24 மணி நேர அடிப்படையில் மழைநீரை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

சென்னை கோட்டூர்புரத்தில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் வேலுமணி, மழைநீரை அகற்ற நவீன உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முதல்-அமைச்சர் உத்தரவின்பேரில் மழை நிவாரண பணிகள் போர்க்கால அடிப்படையில் நடக்கிறது. என்றார்.

## சென்னையில் பலத்த காற்றுடன் கனமழை, வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த புயல் சின்னம் இன்று கரையை கடக்கிறது



சென்னை,

சென்னையில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த புயல் சின்னம் இடையே இன்று கரையை கடக்கிறது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

வடகிழக்கு பருவமழை கடந்த 28-ந் தேதி முதல் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் வங்கக்கடலில் நேற்று முன்தினம் நிலைக்கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று புயல் சின்னமாக மாறி உள்ளது. இந்த புயல் சின்னம் நேற்று மாலை 5.30 மணி நிலவரப்படி புதுச்சேரிக்கு கிழக்கு, தென் கிழக்கே 300 கிலோ மீட்டர் தொலைவில் நிலைக்கொண்டுள்ளது. இது இன்று இரவு காரைக்கால்-சென்னை இடையே புதுச்சேரி கடற்கரை அருகே கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

காற்றுடன் கனமழை

சென்னையில் நேற்று காலையில் இருந்தே கனமழை பெய்து வருகிறது. விடியவிடிய கனமழை பெய்து வருகிறது. காற்றுடன் கனமழை பெய்து வருவதன் காரணமாக சாலைகளில் மரங்கள் விழுந்து உள்ளது. காற்றுடன் கனமழை பெய்து வருவதால் பொதுமக்களும் பெரிதும் அவதிக்கு உள்ளாகிஉள்ளனர். சாலையில் விழுந்து கிடக்கும் மரங்களை மாநகராட்சி ஊழியர்கள் அகற்றி வருகின்றனர். பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

மழை காரணமாக உதவி பெறுவதற்கு 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளது.

பாதாள சாக்கடையில் ஏற்படும் அடைப்புகளை உடனே சீரமைக்கவும் மாநகராட்சி நடவடிக்கை எடுத்து உள்ளது.

மின்சார ரெயில் சேவை பாதிப்பு

சென்னை பல்லாவரம் அருகே தண்டவாளத்தில் மரம் விழுந்ததால் மின்சார ரெயில் சேவை பாதிக்கப்பட்டு உள்ளது.

சென்னை கடற்கரை - தாம்பரம் மற்றும் தாம்பரம் - கடற்கரை மின்சார ரெயில் சேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளது. விழுந்து கிடக்கும் மரத்தை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கடலூரில் மின்சாரம் துண்டிப்பு

கடலூரில் பலத்த காற்றுடன் கனமழை கொட்டி தீர்க்கிறது. கடலூரில் 65 கி.மீ. வேகத்தில் காற்று விசி வருவதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு உள்ளது.

கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள்மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மழை பெய்து வருகிறது.

பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்திற்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக சென்னை, திருவாரூர், அரியலூர், திருவண்ணாமலை, வேலூர், புதுச்சேரி, காரைக்கால், தஞ்சாவூர், நாமக்கல், நாகப்பட்டினம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது. சென்னை பல்கலைகழகத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த செமஸ்டர் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தேர்வு நடைபெறும் நாள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்: கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் மீனவர்களுக்கு, கலெக்டர் மணிகண்டன் வேண்டுகோள்



புதுச்சேரி

புதுவை துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவேண்டாம் என்று என்று கலெக்டர் மணிகண்டன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>காற்றழுத்த தாழ்வுமண்டலம்</u>

வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுமண்டலம் ஏற்பட்டுள்ளது. இது புதுச்சேரி கடற்கரை அருகே கரையை கடக்கும் என்று என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் கடலில் 40முதல் 50கிலோ மீட்டர் வேகத்துக்கு காற்று வீசும் என்றும் கூறியுள்ளது.

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை தொடர்ந்து புதுச்சேரி மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவேண்டாம் என்று கலெக்டர் மணிகண்டன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

<u>மீன்பிடிக்க செல்லவேண்டாம்</u>

இதுகுறித்து கலெக்டர் மணிகண்டன் கூறும்போது, புதுவை–சென்னைக்கு இடையே வங்கக்கடலில் 440கிலோமீட்டர் தொலைவில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இதனால் புதுச்சேரியில் 48மணிநேரத்துக்கு தொடர்ந்த கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வுமையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதோடு காரைக்கால் அருகே இன்று (திங்கட்கிழமை) புயல் கரையை கடக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று தெரிவித்தார்.

புயல் எச்சரிக்கை

இந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக புதுவையில் நேற்று கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் யாரும் நேற்று மீன்பிடிக்க செல்லவில்லை. இதற்கிடையே நேற்று மாலை புதுவை துறைமுகத்தில் புயல் எச்சரிக்கை கூண்டு (நம்பர்–1) ஏற்றப்பட்டது.

இதற்கிடையே நேற்று காலை 8–30மணிமுதல் மாலை 5–30மணிவரை புதுச்சேரியில் 48.7மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

## தொடர் மழை காரணமாக நோணாங்குப்பம் படகு குழாம் வெறிச்சோடியது



அரியாங்குப்பம்,

வங்கக்கடலில் உருவான புயல் சின்னம் காரணமாக புதுச்சேரி மாநிலம் முழுவதும் தொடர் மழை பெய்தது. இடைவிடாத இந்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது. நோணாங்குப்பத்தில் உள்ள

சுண்ணாம்பாறு படகு குழாம் சுற்றுலா பயணிகள் இல்லாமல் வெறிச்சோடியது.

<u>தொடர் மழை</u>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பருவ மழை தீவிரமடைந்து உள்ளது. இதன் காரணமாக புதுச்சேரி மாநிலம் முழுவதும் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் தென்மேற்கு வங்கக்கடலில் உருவான புயல் சின்னம் காரணமாக புதுச்சேரி மாநிலத்தில் மழைபொழிவு அதி தீவிரமடைந்து உள்ளது. வானம் கருமேகங்களால் சூழப்பட்டு உள்ளதாலல் நேற்று காலை வானில் சூரியனையே காண முடியவில்லை. அதனால் பகல் பொழுதாக இருந்தபோதிலும் அந்திப்பொழுதுபோல் காணப்பட்டது. மேலும் தொடர்ந்து இடைவிடாமல் மழை பொழிந்த வண்ணம் உள்ளது. மேலும் இடையிடையே திடீரென காற்றுடன் பலத்த மழையும் பெய்து வருகிறது.

இந்த மழையின் காரணமாக புதுச்சேரி மாநிலம் பாகூர், கிருமாம்பாக்கம், தவளக்குப்பம் ஆகிய பகுதிகளில் தாழ்வான பல இடங்களில் மழை நீர் தேங்கி குளம்போல் மாறியது. மாநிலத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர்வரத்து அதிகரித்து உள்ளது. அதன் காரணமாக ஏரிகளில் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது.

புதுவை மாநிலம் திருக்கனூர், திருபுவனை, மதகடிப்பட்டு பகுதிகளில் மழை காரணமாக ரோடுகளில் ஆறுபோல் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. சில இடங்களில் பலத்த காற்று காரணமாக மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.

இந்த மழை காரணமாக கிழக்கு கடற்கரை சாலையில் அரியாங்குப்பம் – மணவெளி சந்திப்பில் அரியாங்குப்பம் காவல் நிலையம் எதிரே மழை நீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்து பாதிப்பும் ஏற்பட்டது.

<u>படகு குழாம் வெறிச்சோடியது</u>

புதுச்சேரி மாநிலத்தின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான நோணாங்குப்பம் சுண்ணாம்பாறு படகு குழாமில் மழை காரணமாக

பாதிப்பு ஏற்பட்டது. அங்கு சுற்றுலா பயணிகள் வரத்து பெருமளவு குறைந்து படகு குழாம் வெறிச்சோடியது.

மழையின் காரணமாக, வெளி மாநிலத்திலிருந்து வரக்கூடிய சுற்றுலா பயணிகளின் வருகையும் குறைந்தது. பாரடைஸ் பீச்சிலும் குளிப்பதற்கு யாரும் ஆர்வம் காட்டவில்லை என அங்குள்ள ஊழியர்கள் கூறுகின்றனர்.

<u>கடல் சீற்றம்</u>

கடல் சீற்றமாக காணப்படுவதால் கடற்கரையிலிருந்து சுமார் 15 அடி துரத்திற்குள் மட்டுமே குளிக்க எல்லையாக தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. உயிர் பலியை தடுக்க சுற்றுலா துறை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

நோணாங்குப்பம் படகு குழாமில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய 2 விடுமுறை நாட்களில் வழக்கமாக ரூ.8 லட்சத்திற்கும் மேல் வசூல் ஆகும். ஆனால் மழை காரணமாக சுற்றுலா பயணிகள் வரத்து குறைந்ததால் படகு குழாம் வருவாய் பாதிக்கப்பட்டது. பாரடைஸ் பீச்சிலிருந்து வரக்கூடிய படகுகள் பெரும்பாலும் பயணிகள் இல்லாமலே வருகிறது. மேலும் 75 பேர் பயணம் செய்யக்கூடிய "சீகுரூஸ்'' சுற்றுலா படகும் பயணிகள் இல்லாததால் கடந்த 2 நாட்களாக இயக்கப்படாமல் உள்ளதாக கூறப்படுகிறது.

<u>இயல்பு வாழ்க்கை பாதிப்பு</u>

இந்த புயல் மழை காரணமாக புதுச்சேரி மாநிலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. அதிலும் நாளை மிக முக்கிய பண்டிகையான தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில் தொடர் மழை காரணமாக தீபாவளி பண்டிகைக்கு முன்பு நடைபெறும் வியாபாரம் பெருமளவு பாதிக்கப்பட்டு உள்ளது.

தீபாவளி பண்டிகையை, விதவிதமாக பட்டாசு வெடித்து கொண்டாட ஆர்வமுடன் இருந்த சிறுவர் சிறுமிகள், இந்த தொடர் மழையின் காரணமாக ஏமாற்றம் அடைந்து உள்ளனர். அவர்களின் தீபாவளி கொண்டாட்டத்தை இந்த மழை முடக்கி விட்டதாகவே கூறலாம்.

## பில்லூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு கரையோர மக்களுக்கு அபாய எச்சரிக்கை



மேட்டுப்பாளையம்,

வடகிழக்கு பருவமழை காரணமாக பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன்காரணமாக கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. இதையொட்டி கோவை, நீலகிரி மாவட் டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கோவைக்கு குடிநீர் வழங்கும் பில்லூர் அணைக்கு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இதனால் அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

தண்ணீர் திறக்க முடிவு

அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 100 அடி. தற்போது 97 அடியை தண்ணீர் எட்டி உள்ளது. நீர் வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் 98 அடியை எட்டும் போது 4 மதகுகளில் இருந்து தண் ணீர் திறந்து விட அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே தற்போது பில்லூர் அணையில் உபரி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளதால் பவானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அங்கு கரையோர பகுதிகளில் உள்ள வீடுகளை வெள்ளநீர் சூழ்ந்து உள்ளது. அதேபோல் மேட்டுப்பாளையம் பவானி ஆற்றுப்பாலம் அருகே கரையோர பகுதியில் உள்ள பவானி அம்மன் கோவில் மற்றும் விளையாட்டு மாரியம்மன் கோவில் ஆகியவை வெள்ளத்தில் மூழ்கின.

வெள்ள அபாயம்

இந்த நிலையில் மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் உத்தரவின்பேரில் மேட்டுப்பாளையம் தாசில்தார் பாபு ராபாட் கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

வடகிழக்கு பருவமழை காரணமாக பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்ட உயரம் 98 அடியை எட்டும் போது 4 மதகுகளில் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். எனவே, ஆற்றின் கரையோரம் தாழ்வான பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் உடைமைகளுடன் பாதுகாப்பு கருதி மேடான பகுதிக்கு செல்ல வேண்டும்.

இது குறித்து வருவாய் துறையினர், காவல்துறையினர், தீயணைப்புதுறையினர் மற்றும் மருத்துவ துறையினர் ஆகியோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளனர். கரையோரப்பகுதி மக்களுக்கு வெள்ளஅபாயம் பற்றி அந்தந்த கிராம

நிர்வாக அலுவலர்கள் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கடல் சீற்றம் காரணமாக கடலூரில், மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை



கடலூர்முதுநகர்,
கடல் சீற்றம் காரணமாக கடலூரில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

<u>பலத்த மழை</u>

தமிழகத்தில் கடந்த மாதம் 28–ந்தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. அதைத்தொடர்ந்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அதேபோல் கடலூர் பகுதியில் பரவலாக மழை பெய்து வருகிறது.

கடலூர் துறைமுகத்தில் இருந்து நாள்தோறும் சிங்காரத்தோப்பு, சோனாங்குப்பம், தேவனாம்பட்டினம், ராசாப்பேட்டை, அக்கரைக்கோரி உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் 100–க்கும் மேற்பட்ட விசை மற்றும் பைபர் படகுகளில்

ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின்றனர். இந்த நிலையில், தற்போது பெய்து வரும் பலத்த மழையின் காரணமாகவும், தென்மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி இருப்பதால் கடலூர் துறைமுக பகுதியில் கடல் சீற்றம் அதிகமாக காணப்படுகிறது. மேலும், கடலூர் தாழங்குடா, தேவனாம்பட்டினம் கடற்கரை பகுதியில் பலத்த காற்றுடன் கடல் சீற்றம் காணப்படுகிறது.

இதன் காரணமாக கடலூர் துறைமுக பகுதியில் இருந்து பைபர் மற்றும் விசை படகுகளில் கடலுக்குள் சென்று மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் மீன்பிடிக்க நேற்று செல்லவில்லை. மீன்பிடிக்க செல்லாததால் மீனவர்கள் தங்களுடைய பைபர் மற்றும் விசைபடகுகளை துறைமுக பகுதிகளில் நிறுத்தி வைத்திருந்தனர். மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் கடலூர்துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது.

## நெல்லை மாவட்டத்தில் கனமழை; தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் அணைகளின் நீர்மட்டம் உயர்வு; காருடன் வெள்ளத்தில் சிக்கிய 2 பேர் மீட்பு



விக்கிரமசிங்கபுரம்

நெல்லை மாவட்டத்தில் பெய்துவரும் கனமழையால் தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பாபநாசம் உள்ளிட்ட முக்கிய அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது.

தொடர் மழை

நெல்லை மாவட்டத்தில் பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலைகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இதனால் பாபநாசம் மலைப்பகுதியில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து பெருமளவு அதிகரித்து இருக்கிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.அதிகபட்ச அளவாக பாபநாசம் அணையில் 102 மில்லி மீட்டர் மழை பெய்து இருப்பதால், நேற்று காலையில் அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 327 கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 87.45 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், 90 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் நீர்மட்டம் 2½ அடி உயர்ந்தது. அணையில் 2 ஆயிரத்து 544 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 100.43 அடியில் இருந்து 106.46 அடியாக உயர்ந்தது. அதாவது ஒரே நாளில் 6 அடி உயர்ந்தது. மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 220 கனஅடி தண்ணீர் வந்தது. அணையின் நீர்மட்டம் 68 அடியை எட்டியது. அணையில் ஆயிரத்து 428 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

கடலில் கலக்கும் தண்ணீர

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து அதிக தண்ணீர் வரத்து இருப்பதாலும், மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதாலும் தாமிரபரணியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகளில் இருந்து பாசனத்துக்கு நேற்று தண்ணீர் திறக்கப்படவில்லை. அணைகள் மூடப்பட்டன.

தாமிரபரணி ஆற்றில் ஓடும் வெள்ளம், ஸ்ரீவைகுண்டம் அணையைக்

கடந்து புன்னக்காயல் கடலில் கலந்து வீணாகி வருகிறது.

குண்டாறு அணை நிரம்பி வழிகிறது. கருப்பாநதி அணைக்கு வினாடிக்கு 305 கனஅடி தண்ணீர் வரத்து இருக்கிறது. அணையின் நீர்மட்டம் 72.10 அடியை எட்டி, நிரம்பி வழிகிறது. இதனால், நேற்று அணையில் இருந்து வினாடிக்கு 305 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

கடனாநதி அணைக்கு, வினாடிக்கு 831.2 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையின் நீர்மட்டம் 81.50 அடியாக உயர்ந்தது.

ராமநதி அணைக்கு வினாடிக்கு 195.1 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையின் நீர்மட்டம் 78.75 அடியாக இருந்து. இந்த அணையும் வேகமாக நிரம்பி வருகிறது. இதனால் நெல்லை மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>நெல்லை</u>

நெல்லையில் நேற்று முன்தினம் இரவு விடிய, விடிய மழை கொட்டியது. நேற்று பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது மழை பெய்தது.

இதையொட்டி தாமிரபரணி ஆற்றில் வெள்ளத்தின் அளவு அதிகரித்த வண்ணமாக இருந்தது. குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமி கோவிலை வெள்ளம் சூழ்ந்தபடி செல்கிறது. இதே போல் பாளையங்கால்வாய், நெல்லை கால்வாய்களில் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் வெள்ளம் கரைகளை தொட்டவாறு ஓடுகிறது.

வெள்ளத்தில் சிக்கிய கார்நெல்லை வடக்கு பை-பாஸ் ரோட்டில் இருந்து மணிமூர்த்தீசுவரம் வழியாக அருகன்குளம் செல்லும் ரோட்டில், நெல்லை கால்வாய் பகுதியில் நேற்று ஒரு கார் வெள்ளத்தில் சிக்கியது.

அதாவது, அந்த ரோட்டில் உள்ள பழமையான பாலத்தை இடித்துவிட்டு, புதுப்பித்து கட்டும் பணி கடந்த மாதம் தொடங்கியது. இருபுறமும் தடுப்பு சுவர் கட்டப்பட்ட நிலையில், பாலம் கட்டும் பணி நடைபெறாமல் உள்ளது.

இதற்காக அந்த வழியாக செல்லும் வாகனங்களுக்கு பக்கவாட்டில் இணைப்பு சாலை மண்ணால் அமைக்கப்பட்டு இருந்தது. இதில் அந்த கால்வாய் பகுதியில் மிகவும் பள்ளமாக ரோடு போட்டு, தண்ணீர் செல்வதற்கு 2 குறுகிய மடைகள் அமைத்து உள்ளார்கள். ஆனால் வெள்ளம் அதிகமாக வந்ததால் சாலைக்கு மேலே தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

அப்போது பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற துணை தாசில்தார் சிவசுப்பிரமணியன் (வயது 65) அந்த வழியாக நேற்று காரில் சென்றார். காருக்குள் அவருடைய மனைவியும் இருந்தார்.

அப்போது பக்கவாட்டு மண் சாலையில் கால்வாயை கடக்க முயற்சி செய்தார். இதைக்கண்ட அக்கம் பக்கத்தினர் அவரை எச்சரிக்கை செய்து மேலும் போகக்கூடாது என்று கூறினார்கள். இதையடுத்து சிவசுப்பிரமணியன் காரை பின்நோக்கி எடுத்துவர முயற்சி செய்தார். பத்திரமாக மீட்பு

எதிர்பாராதவிதமாக காரை வெள்ளம் இழுத்து சென்றது. இதைக்கண்ட அந்த பகுதி மக்கள் தண்ணீருக்குள் இறங்கி சிவசுப்பிரமணியன்,

அவருடைய மனைவி ஆகிய 2 பேரையும் பாதுகாப்பாக மீட்டு கரைக்கு கொண்டு வந்தார்கள்.

இதுகுறித்து தகவல் அறிந்த பாளையங்கோட்டை தீயணைப்பு நிலைய அலுவலர் ஜெகதீஷ் தலைமையில், தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்து கயிறு கட்டி காரை மீட்டனர்.இந்த மண் சாலை துண்டிக்கப்பட்டு விட்டதால் மணிமூர்த்தீசுவரம், சேந்திமங்கலம், அருகன்குளம், கட்டுடையார்குடியிருப்பு, குறிச்சிகுளம், பாலாமடை, ராஜவல்லிபுரம் போன்ற கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உள்ளது. இந்த கிராம மக்கள் தாழையூத்து வழியாக நீண்டதூரம் சுற்றி செல்கிறார்கள்.

இந்த நிலையில் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதியில் தற்காலிக இரும்பு பாலம் அமைத்து உள்ளார்கள். இந்த பாலத்தின் வழியாக மக்கள் சென்றுவர ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

வாகனங்கள் செல்லவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.இதே போல் நெல்லையில் இருந்து தென்காசி நோக்கி சென்ற அரசு பஸ், அபிஷேகப்பட்டியை அடுத்துள்ள வெள்ளாளன்குளம் ரோட்டில் சென்ற போது, நிலைதடுமாறியது. அந்த பஸ்சின் டயர் சாலையோரத்தில் மண்ணுக்குள் புதைந்தது. இதையடுத்து மீட்பு வாகனம் மூலம் அந்த பஸ் மீட்கப்பட்டது.

நெல்லை வண்ணார்பேட்டையில் ரோட்டோரம் நின்றிருந்த மரம், மழைக்கு தாக்குபிடிக்க முடியாமல் கீழே சாய்ந்தது.

<u>வீடுகள் இடிந்தன</u>

நெல்லை அருகே உள்ள சேந்திமங்கலம் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்தவர் இசக்கி பாண்டியன் (38). ஆட்டோ டிரைவர்.

இவரது வீட்டின் மேற்கூரை தொடர் மழையால் இடிந்து விழுந்தது. இதில் வீட்டுக்குள் இருந்த டி.வி, பீரோ, கட்டில் உள்ளிட்ட பொருட்கள் சேதம் அடைந்தன. இந்த சம்பவம் நடந்த போது வீட்டில் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

நெல்லை தச்சநல்லூர் முத்துமாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் உலகநாதன். இவருடைய மகன் சுந்தர். இவருடைய வீடு நேற்று பெய்த கனமழையில் இடிந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக வீட்டில் இருந்தவர்கள் காயமின்றி தப்பினார்கள். இடிந்த வீட்டை வருவாய்த்துறையினர் பார்வையிட்டனர்.

பலத்த மழையின் காரணமாக குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவிகளிலும், மணிமுத்தாறு அருவியிலும் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டியது.

மழை அளவு

நெல்லை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:-

பாபநாசம் -102, சேர்வலாறு -70, மணிமுத்தாறு -99.80, கடனாநதி -60, ராமநதி -70, கருப்பாநதி -10, குண்டாறு -19, நம்பியாறு -34, கொடுமுடியாறு -25, அடவிநயினார் -25.

முக்கிய ஊர்களில் பதிவான மழை அளவு மில்லிமீட்டரில் வருமாறு:- அம்பை -88, ஆய்குடி -40.80, சேரன்மாதேவி -8.02, நாங்குநேரி -60, பாளையங்கோட்டை -55, ராதாபுரம் -61, சங்கரன்கோவில் -15, செங்கோட்டை -22, சிவகிரி -8, தென்காசி -52, நெல்லை -35, ஆலங்குளம் -25.20, வீரகேரளம்புதூர் -40.50.

## திருவள்ளூரில் பலத்த மழை



திருவள்ளூர்,
திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான ஈக்காடு, காக்களூர், அரண்வாயல், மணவாளநகர், வெங்கத்தூர், திருப்பாச்சூர், கடம்பத்தூர், அகரம், புதுமாவிலங்கை, பேரம்பாக்கம், மப்பேடு, கீழச்சேரி, மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மீஞ்சூர், பொன்னேரி, பழவேற்காடு, சோழவரம், கும்மிடிப்பூண்டி போன்ற இடங்களிலும் பலத்த மழை பெய்தது. காஞ்சீபுரம் மாவட்டம் காஞ்சீபுரம், வண்டலூர், செம்மஞ்சேரி, சோழிங்கநல்லூர் போன்ற பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது.

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

# தொடர் மழை நீடிப்பு: பெரியாறு அணை நீர்மட்டம் 142 அடியை எட்ட வாய்ப்பு



கம்பம், நவ. 9–

தேனி அருகே லோயர் கேம்ப் அடுத்துள்ள கேரள எல்லைப் பகுதியான தேக்கடியில் முல்லைப் பெரியாறு அணை உள்ளது. இந்த அணை மூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டத்தில் உள்ள விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

கடந்த சில நாட்களாக நீர் பிடிப்பு பகுதியில் கன மழை நீடித்து வருவதால் அணையின் நீர் மட்டம் படிபடியாக உயர்ந்து வருகிறது. நேற்றும் விடிய விடிய மழை கொட்டித் தீர்த்தது. இதனால் அணையின் நீர் மட்டம் 129.20 அடியை தாண்டியது. அணைக்கு 2660 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து 511 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் பெரியாறு அணை நீர் மட்டம் 139 அடியை தாண்டியது. நவம்பர் 20–ந் தேதி 142 அடி நிரம்பியது. இந்த ஆண்டும்

மழை நீடித்து வருவதால் 142 அடியை நீர் மட்டம் எட்டும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வைகை அணை நீர் மட்டம் 52.59 அடியாக உள்ளது. அணைக்கு 1143 கன அடி நீர் வருகிறது. பாசன பகுதியில் மழை பெய்து வருவதால் மதுரை மாநகர் குடிநீருக்காக 60 கன அடி நீர் மட்டும் திறந்து விடப்படுகிறது.

மஞ்சளாறு அணை நீர் மட்டம் 56.40 அடியாக உள்ளது அணைக்கு 140 கன அடி நீர் வருகிறது. பாசனத்திற்காக 240 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

சோத்துப்பாறை அணை நீர் மட்டம் 126.28 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 15 கன அடி நீர் அப்படியே திறந்து விடப்படுகிறது.

மழை அளவு விபரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

தேக்கடி – 0.2, கூடலூர் – 1, சண்முகா நதி அணை – 2, வைகை – 0.4, மஞ்சளாறு அணை – 1, கொடைக்கானல் – 2 தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**சூறைக்காற்றுடன் சென்னையை சுழற்றியடித்த தொடர்மழை: குளங்களாக காட்சியளிக்கும் சாலைகள்**



சென்னை, நவ.8–

வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் தென்மேற்கு வங்க கடலில் தமிழகத்தையொட்டி மேலடுக்கு சுழற்சி உருவானது. இதனால் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.அது காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி, பின்னர், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக (புயல் சின்னமாக) வலுப்பெற்றது. புதுச்சேரிக்கு தென்கிழக்கே சுமார் 300 கிலோமீட்டர் தூரத்தில் கடலில் நிலைகொண்டுள்ளது.

இந்த புயல் சின்னம் இன்று சென்னை- காரைக்கால் இடையே கரையை கடக்கும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. புயலாக உருவெடுத்தால் அதற்கு 'ரோனு' புயல் பெயரிட திட்டமிடப்பட்டுள்ளது

இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலோர மாவட்டங்களிலும், வடக்கு கடலோர மாவட்டங்களிலும் பலத்த மற்றும் மிக பலத்த மழை பெய்யும். மற்ற பகுதிகளில் ஒருசில இடங்களில் பரவலாக மழை பெய்யும்.

தமிழகத்தின் வடக்கு கடலோரப் பகுதிகளில் மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்துக்கு காற்று வீசும் என்பதால் அடுத்த 48 மணி நேரத்துக்கு மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் அவ்வப்போது விட்டுவிட்டு மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இந்த மழை மேலும் 2 நாட்களுக்கு நீடிக்கும் வாய்ப்பு உள்ளதால் சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.நேற்று காலையில் இருந்து இடைவிடாது பெய்துவரும் தொடர்மழையால் சென்னை நகரின் பல சாலைகளில் மழைநீர் குளம்போல் தேங்கி நிற்பதால் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து செல்கின்றன.

நேற்றிரவில் இருந்து சூறைக்காற்றுடன் சுழற்றியடித்துவரும் பெருமழையால் சென்னைக்குட்பட்ட முக்கிய சாலைகளின் ஓரம் முப்பதுக்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன. இதனால் அப்பகுதிகளில் போக்குவரத்து ஓரளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. விழுந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் பணிகளில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வடசென்னையின் தாழ்வான பகுதிகளான அயன்புரம், பெரம்பூர், மூலக்கடை, கொடுங்கையூர், வியாசர்பாடி உள்ளிட்ட பல இடங்களில் தெருக்களில் மழைநீர் வெள்ளமாக தேங்கி நிற்கிறது.

இந்நிலையில், இன்று காலையில் இருந்து பல இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. பல்லாவரம் அருகே ரெயில் தண்டவாளத்தின் மீது மரம் விழுந்ததால் இன்று காலை சென்னை கடற்கரை-தாம்பரம் மற்றும் தாம்பரம்-சென்னை கடற்கரை நிலையங்களுக்கு இடையிலான மின்சார ரெயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்மழையை முன்னிட்டு, மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படுவோரை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு சென்னை மாநகராட்சி சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கிண்டியில் உள்ள காந்தி மண்டபம் உள்ளிட்ட ஐந்து இடங்களில் தற்காலிக பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஒவ்வொரு வார்டிலும் உள்ள சமுதாயக்கூடம் மற்றும் பள்ளிகளிலும் மக்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்படுவோர் புகார் தெரிவிக்க ஒருங்கிணைக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு 24 மணிநேர அவசரச்சேவை எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இயற்கை பேரிடர் தொடர்பான பாதிப்புகளுக்கு 1077 என்ற எண்ணிலும், மின்சார ஒயர் அறுந்து விழுந்தால் 1913 எண்ணையும் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் சூழ்ந்துள்ள சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை நவீன பம்புகளின் மூலமாக இரைத்து வெளியேற்றும் பணிகளில் மாநகராட்சி அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த பணிகளை இன்று காலை தமிழக அமைச்சர்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

## நாமக்கல் மாவட்டத்தில் கனமழை: பள்ளி–கல்லூரிக்கு விடுமுறை



நாமக்கல்நவ,9–

வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த காற்றழுந்த தாழ்வு பகுதி வலுப்பெற்று புயல் சின்னமாக மாறி உள்ளது. அந்த புயல் சின்னம் கரைக்கால்–சென்னை இடையே இன்று கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வட கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் இன்று கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் நாமக்கல் மாவட்டத்தில் விடிய, விடிய மழை பெய்து வருகிறது. இதையடுத்து இன்று காலையும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பள்ளி, கல்லூரிக்கு இன்று(திங்கட்கிழமை) விடுமுறை அளித்து நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டார்.

**புதுவை, கடலூர், விழுப்புரத்தில் சூறை காற்றுடன் பலத்த மழை: மரங்கள் வேரோடு சாய்ந்தன**



புதுச்சேரி, நவ. 9–

வடகிழக்கு பருவ மழை கடந்த வாரம் தொடங்கி தமிழகம் முழுவதும் பெய்து வருகிறது.

புதுவை, கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தொடர் மழை பெய்து வருகிறது. கடந்த ஒரு வார காலமாக தினமும் இரவில் மழை பெய்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியது. இதனால் கடலோர பகுதி மட்டுமல்லாது உள் பகுதிகளில் மழை பரவியது.

இதற்கிடையே வங்க கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுப்பெற்று தாழ்வு மண்டலமாக உருவாகி புயல் சின்னமாக உருவெடுத்தது. இதனால் நேற்று அதிகாலை முதலே புதுவையில் மழை பெய்ய தொடங்கியது.

தொடர்ந்து நேற்று பகல் முழுவதும் அவ்வப்போது சற்று மழை நின்றாலும் தொடர்ந்து மழை பெய்த வண்ணமே இருந்தது இந்த நிலையில் இரவில் கன மழை பெய்ய தொடங்கியது. சூறைகாற்றுடன் விடிய விடிய பலத்த மழை பெய்தது.

சூறை காற்றினால் ஆங்காங்கே மரங்கள் வேரோடு சாய்ந்தன. ஒரு சில இடங்களில் மின் வயர்கள் அறுந்து விழுந்தன. இதனால் நகரின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் சூழ்ந்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அருகாமையில் இருந்த அரசின் பள்ளி, கல்லூரி, சமுதாய நல கூடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

கடல் கொந்தளிப்புடன் காணப்படுகிறது. புதுவையில் 3–வது எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தொடர் மழை காரணமாக புதுவையில் அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரி மற்றும் புதுவை பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இன்று (திங்கட்கிழமை) விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை புதுவை மாவட்ட கலெக்டர் மணிகண்டன் பிறப்பித்துள்ளார்.

புயல் சின்னம் இன்று இரவு காரைக்கால்–சென்னை இடையே புதுவை கடற்கரை அருகே கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2011–ம் ஆண்டு ‘தானே’ புயல் கரையை கடந்த போது புதுவையில் பலத்த சேதம் ஏற்படுத்தியது.

இதனால் மாவட்ட நிர்வாகம் புயலை எதிர்கொள்ள பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளது. கடற்கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க 19 பாதுகாப்பு மையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அவசர கால உதவிக்கு 1070, 1077 என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அரசின் பொது பணித்துறை, மின்துறை, வருவாய்துறை உள்ளாட்சி துறை ஆகியவை இணைந்து செயல்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசு துறைகளில் பணியாற்றுபவர்கள் விடுப்பு எடுக்க கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காரைக்காலில் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்தது. நேற்று விடிய, விடிய மழை கொட்டியது. இன்று காலையிலும் மழை தொடர்ந்து பெய்தது.

காலையில் இருந்து சூறை காற்று வீசியது. ஆங்காங்கே மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.

தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. ரோடுகளில் தண்ணீர் பெருகி ஓடியது.

கடல் இன்று அதிக சீற்றத்துடன் காணப்பட்டது. அதிக உயரத்துக்கு அலைகள் வீசின. புயல் எச்சரிக்கை காரணமாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

காரைக்காலில் இன்று பள்ளி– கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

விழுப்புரத்தில் கடந்த 2 நாட்களாக மழை கொட்டியது. நேற்று இரவு பலத்த மழை பெய்தது. இன்று காலையிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. ரோடுகளில் தண்ணீர் பெருகி ஓடுகிறது.

விழுப்புரம் கீழ் பெரும்பாக்கம் தரை பாலத்தில் தண்ணீர் தேங்கி உள்ளது. விழுப்புரம் பஸ் நிலையம் நகராட்சி மைதானம், போலீஸ் மைதானம்,

சுதாகர் நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. தொடர் மழை காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளி–கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

விழுப்புரம் மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் இன்று அதிகாலை பலத்த சூறாவளி காற்று வீசியது. விழுப்புரம் அருகே கோலியனூர் கூட்டு ரோடு பனையன்குப்பம் பகுதியில் 3.30 மணிக்கு புளிய மரம் வேரோடு சாய்ந்தது. இதையொட்டி புதுவை – விழுப்புரம் ரோட்டில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நெடுஞ்சாலை துறையினர், போலீசார் விரைந்து வந்து மரத்தை அகற்றினார்கள். இதே போல் இன்று காலை 8 மணிக்கு பனையன்குப்பத்தில் சென்னை – கும்பகோணம் சாலையில் மற்றொரு புளிய மரம் வேரோடு சாய்ந்தது. அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மயிலம் அருகே கீழ் மயிலம் பகுதியில் சூறாவளி காற்றினால் அதிகாலை 4 மணிக்கு 100 ஆண்டு பழமையான ஒரு புளிய மரம் அந்த பகுதியில் மின் கம்பங்கள் மீது சாய்ந்தது. இதில், 4 மின் கம்பங்கள் கீழே சாய்ந்தன. இதையொட்டி மயிலம்– தென்குலப்பாக்கம் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அந்த பகுதியில் மின் தடை ஏற்பட்டது.

கடலூரிலும் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்தது. நேற்று விடிய விடிய மழை பெய்தது. இன்று அதிகாலை 4.30 மணிக்கு சூறாவளி காற்றுடன் மழை கொட்டியது.

கடலூர் கோண்டூர் பகுதியில் ஒரு மரம் வேரோடு சாய்ந்தது. இதனால் கடலூர் – நெல்லிக்குப்பம் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தீயணைப்பு துறையினர் விரைந்து சென்று மரத்தை அப்புறப்படுத்தினார்கள்.

கடலூர் அருகே கண்ணாரப்பேட்டை பகுதியில் காலை 5 மணிக்கு மற்றொரு மரம் சாய்ந்தது. இதனால் கடலூர்– விருத்தாசலம் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சூறை காற்றினால் கடலூர் பகுதியில் இன்று காலை மின் தடை ஏற்பட்டது. தொடர் மழை காரணமாக கடலூர் மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டது. கடல் அதிக சீற்றத்துடன் காணப்பட்டது. கடலூர் துறைமுகத்தில் 3–ம் எண்ண எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை.

**தொடர் மழை எதிரொலி: சோலையார் அணை நீர்மட்டம் 104 அடியானது**



வால்பாறை, நவ. 8–

வால்பாறை பகுதியில் தற்போது பெய்துவரும் வடகிழக்கு பருவமழை சற்று தீவிரமடைந்துள்ளது. இதனால் வால்பாறை பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் பச்சை தேயிலை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வால்பாறை பகுதியில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு கிடைக்காமல் ஏமாற்றிவிட்டது. இந்த நிலையில் வடகிழக்கு

பருவமழை கடந்த 10 நாட்களாக அவ்வப்போது ஒருசில இடங்களில் கனமழையும் நாள் முழுவதும் லேசான சாரல் மழையும் பெய்துவருகிறது.

நேற்று முன்தினம் வால்பாறை பகுதியில் மழை பெய்யவில்லை. ஆனால் நேற்று வால்பாறை பகுதியில் மழைபெய்தது. ஒருசில எஸ்டேட் பகுதிகளில் கனமழையும் பெய்துள்ளது.

இதனால் சோலையார் அணைக்கு விநாடிக்கு 352.55 கன அடித் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் 104 அடியாக இருக்கிறது.

தீபாவளிக்கு 2 நாட்களே உள்ள நிலையில் தற்போது பெய்துவரும் மழையால் இந்த ஆண்டு தீபாவளி பட்டாசு விற்பனை மந்தமாகவே இருந்து வருகிறது.

## சூறாவளி காற்று–ராட்சத அலைகள் பாம்பனில் 1–வது புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்



ராமேசுவரம், நவ. 9–

கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டதால் பாம்பனில் 1–வது எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதனால் ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. ராமேசுவரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு பெய்யத் தொடங்கிய மழை நேற்று காலை 7 மணி வரை நீடித்தது. இதனால் சீதா தீர்த்தம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கியது.

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையை தொடர்ந்து பாம்பன் துறைமுக அலுவலகத்தில் நேற்று 1–வது எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. பாம்பன் வடக்கு கடல் பகுதியில் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டதால் ரெயில் பாலத்தின் உயரத்துக்கு அலைகள் சீறி எழுந்தன. மேலும் 50 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசியது.

புயல் எச்சரிக்கை காரணமாக பாம்பனில் விசைப்படகு, நாட்டுப்படகு மீனவர்கள் யாரும் இன்று மீன் பிடிக்க கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று மீன்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். மண்டபம் வடக்கு கடல் பகுதியிலும் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டது. கடல் அலைகள் கடலோர காவல் படை முகாமின் தடுப்புச் சுவருக்கு மேல் சீறி எழுந்தன.

வழக்கமாக இன்று (9–ந் தேதி) மீன்பிடிக்க செல்லும் ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் தீபாவளி பண்டிகையையொட்டி கடலுக்குச் செல்லவில்லை என்று விசைப்படகு மீனவர் சங்க தலைவர் தேவதாஸ் தெரிவித்தார்.